விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com


சங்கு 25
ஒலி 189 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 11 செவ்வாய்க்கிழமை (25.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஓமந்தையில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி

### பல இலட்சம் பெறுமதியான மரக்கடத்தல் முறியடிப்பு



15

## கல்முனை பிரதேச செயலகத்தின் நிர்வாக அடக்குமுறையை கண்டித்து

### நேற்று மாபெரும் போராட்டம்

(மட்டக்களப்பு)

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயங்களுக்கு உடனடித் தீர்வினை பெற்றுத் தருமாறு கோரி நேற்று பாரியஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரதேச செயலகத்தின் 15



## விவசாயிகளுக்கு இலவச உரம்

### அமைச்சர் மகிந்த

(கொழும்பு)

அனைத்து விவசாயிகளுக்கும் இலவச உரம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் இரு போகங்களுக்கும் உரம் இலவசமாக 15

# சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்துவோம்


## பிரிட்டன் தொழில் கட்சி உறுதி

(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற பாரிய அநீதிகளுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்ய இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவோம் என பிரிட்டன் தொழில்கட்சி உறுதியளித்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)





### கற்பிட்டியில்

## யாழ்.இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு மாமுனையைச் சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவர் கற்பிட்டி பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சடலமானது, நேற்று முன்தினம் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்வடம 15

### பறவைக் காய்ச்சலால் இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்

## இலங்கையை அவதானமாக இருக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்து

(கொழும்பு)

பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கும் அண்மையில் கண்டறியப்பட்டு வெளிநாடுகளில் பரவி வருவதால், இலங்கையை அவதானமாக இருக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தியுள்ளது.

பறவைக் காய்ச்சல் என்பது இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்களால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும், இது முதன்மையாக பறவைகளைப் பாதிக்கிறது, ஆனால் மற்ற விலங்குகள் மற்றும் மனிதர்களும் பாதிக்கப்படலாம் என அஞ்சப்படுகின்றது.

இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்கள் வெவ்வேறு விகாரங்களால் ஏற்படலாம் மற்றும் H5 துணை 02

## மன்னாரில் வீதி விபத்து; இளம் குடும்பஸ்தர் மரணம்

(மன்னார்)

மன்னார்முருங்கன்பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முருங்கன் ரயில் கடவை பகுதியில் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்தானது நேற்று மாலை 5 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதில் சாளம்பன் நாகசெட்டியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தீபன் (வயது-35) என்பவரே உயிரிழந்தவராவார்.

மன்னாரிலிருந்து வந்த தனியார் பேருந் 15

## வவு.களஞ்சியசாலையில் பாரிய தீ விபத்து

### பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசம்

(வவுனியா)

வவுனியாவில் தொழிற்சாலையுடன் இணைந்த களஞ்சியசாலையில் இடம்பெற்ற பாரிய தீ விபத்தினால் பல இலட்சம்பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

வவுனியா, மரக்காரம்பளை பகுதி 15

### கொக்குவிலில்

## வெதுப்பகம் ஒன்றுக்கு சீல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலில் சுகாதார சீர்கேடாக இயங்கிய வெதுப்பகம் ஒன்றுக்கு சீல் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி 15

### வடமராட்சி திக்கம் பகுதியில்

## உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, திக்கம் பகுதியில் சில நாட்களின் முன் உயிரிழந்த குடும்பப் பெண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

73 வயதான வேலாயுதப்பிள்ளை சிவமணி என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் இரண்டாவது கணவர் வவுனியாவைச் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மட்டக்களப்பில் போராட்டம்




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு மாவட்டவலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தலைமையில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள், கொலைகாரனால் நீதிவழங்க முடியுமா?, பிள்ளைகளை தினம் தேடிக் கொண்டே நீதி இன்றியே இறந்து கொண்டிருக்கின்றோம், நாங்கள் கேட்பது இழப்பீடையோ மரணச் சான்றிதழையோ அல்ல முறையான நீதி விசாரணையே, போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சர்வதேச சமூகத்திற்கு கொண்டுசெல்லும் வகையிலான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் இங்கு சங்க செயலாளரினால் வாசிக்கப்பட்டது.

சுமார் 100 இற்கு மேற்பட்ட காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்து கொண்டதுடன் ஒரு மணிநேரம் இவ்வார்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஒவ்வொரு மாதமும் 24 ஆம் திகதி தமது உறவுகளுக்கு நீதி கோரிய போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தெரிவித்தார்.

(ம-7,10)

# நாட்டில் சிறைக்கு செல்பவர்கள் அதிகரிப்பு

## சிறைச்சாலைகள் திணைக்களம்

(கொழும்பு)

இந்த நாட்டில் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு சிறையில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைத் திணைக்கள அறிக்கைகளின்படி, 2021ஆம் ஆண்டில் 1,202 பேரும், 2022 ஆம் ஆண்டில் 3,956 பேரும், 2023ஆம் ஆண்டில் 5,687 பேரும்திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2021ஆம்ஆண்டை விட இது 44 சதவீத அதிகரிப்பாகும்.

மேலும், 2021ஆம் ஆண்டில், திருட்டு, கொள்ளைச் சம்பவங்களில் 19 பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், 2022ல், 49 ஆகவும், 2023ல், 61ஆகவும் அதிகரித்துள்ளது.

மக்களை தவறாக வழிநடத்தி ஏமாற்றி பணத்தை திருடும் சம்பவங்களும் அதிகளவில் பதிவாகி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-7,10)

# மோ. சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்

## புதுக்குடியிருப்பு சந்தியில் சம்பவம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு சந்திக்கு அண்மித்துள்ள பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து புதுக்குடியிருப்பு, சூசையப்பர் ஆலய சந்தியில் ஒட்டுசுட்டான் வீதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில், புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞன் ஒருவரே படுகாயமடைந்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிவேகமாக பயணித்த மோட்டார் சைக்கிளுக்கு முன்னே திடீரென மாடு ஒன்று குறுக்கறுத்து சென்றுள்ளது.

இதன்போது, வேகக்கட்டுபாட்டினை இழந்த இளைஞனின் மோட்டார் சைக்கிள் புதுக்குடியிருப்பில் இருந்து எதிரே ஒட்டுசுட்டான் நோக்கி பயணித்து கொண்டிருந்த காரின் மீது மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,10,299)

## சர்வதேச...

எதிர்வரும் ஜூலை நான்காம் திகதி பிரிட்டனில் பாராளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், கென்சவேர்ட்டிவ் தொழில்கட்சி மற்றும் பசுமை கட்சிகளின் பிரதிநிதிகள் பிரிட்டனில் முதல் தடவையாக இடம்பெற்றுள்ள தமிழ் தேர்தல் மேடை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளனர்.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற பாரிய அநீதிகளுக்கு நீதி பொறுப்பு கூறலை உறுதி செய்வதை நோக்கிய நடவடிக்கைகளை எடுக்கப்போவதாகவும் உறுதியளித்துள்ளனர்.

தமிழ் கார்டியன் பிரிட்டிஸ் தமிழ் கூட்டமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு வெஸ்ட்மினிஸ்டரில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட பிரிட்டனின் பிரதான கட்சிகளின் பிரதிநிதிகள் நாட்டிற்கான அவர்களின் தொலைநோக்கையும் பிரிட்டனின் தமிழ் சமூகத்திற்கான தங்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பையும் முன்வைத்தனர்.

மேலும், கென்சவேர்ட்டிவ் கட்சியின் பிரதிவெளிவிவகார அமைச்சர் அன்று மிட்ச்செல், தொழில் கட்சியின் ஆசியாவிற்கான நிழல் அமைச்சர் கதெரின் வெஸ்ட், பசுமை கட்சியின் புலம் பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் ஆதரவு பேச்சாளர் பெனாலி ஹம்தாச்சே மற்றும் தமிழ்கார்டியன் ஆசிரியர் மருத்துவர் துசியன் நந்தகுமார் ஆகியோர் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என்பதை அங்கீகரித்தல் பாரிய அநீதிகளிற்கான சர்வதேச நீதி உட்பட முக்கிய விடயங்கள் குறித்து எழுப்பிய கேள்விகளிற்கு பதிலளித்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை விவகாரத்தை கென்சவேர்ட்டிவ் கட்சி தொடர்ந்தும் எழுப்பும் என கென்சவேர்ட்டிவ் கட்சியின் பிரதிவெளி விவகார அமைச்சர் அன்று மிட்ச் செல் தெரிவித்தார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த நடவடிக்கைகளிற்காக கென்சவேர்டிவ் கட்சி தொடர்ந்தும் அழுத்தங்களை கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையில் இலங்கை விவகாரத்தை எழுப்புவது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர், நாங்கள், இதை நிச்சயமாக ஆராய்வோம். இங்குள்ள தமிழ் சமூகத்தினர் அதற்கான அழுத்தங்களை கொடுத்தால் நாங்கள் நிச்சயமாக அதனை செய்வோம் என தெரிவித்தார். (ம-7,10)

## இலங்கையை...

வகை கடுமையாகப் பரவும் திறனைக் கொண்டுள்ளது மற்றும் முக்கிய பறவைக் காய்ச்சல் விகாரங்களில் H5, H7, H9 மற்றும் H10 ஆகியவை அடங்கும்.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் (MRI) நிபுணர் வைராலஜிஸ்ட் வைத்தியர் ஜூட் ஜயமஹா கூறுகையில், பறவைக் காய்ச்சலின் பல்வேறு விகாரங்கள் மனிதர்கள் உட்பட புதிய புரவலர்களை மாற்றுவதற்கும் மாற்றியமைப்பதற்கும் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பறவைகளின் உமிழ்நீர், சளி, மலக்கழிவு ஆகியவற்றிலிருந்து இந்த வைரஸ் வெளியேறுவதாகவும், அதனால் பாதிக்கப்பட்ட பறவைகள் அல்லது அசுத்தமான சூழலில் நெருங்கிய, பாதுகாப்பற்ற தொடர்பைக் கொண்டிருக்கும் மனிதர்கள் அல்லது விலங்குகள் பாதிக்கப்படலாம் என்றும் வைராலஜிஸ்ட் வைத்தியர் ஜூட் ஜெயமஹா தெரிவித்திருந்தார். (ம-7,10)

## உருக்குலைந்த...

சேர்ந்தவர். அவர்களுக்கு ஒரேயொரு மகள் உள்ளார். அவர் தற்போது வெளிநாட்டில் தங்கியிருப்பதாக கூறப்படுகிறது. அவர் வெளிநாடு சென்றது தாயாருக்கு பிடிக்கவில்லை. இதனால் கடந்த சில வருடங்களாக இருவரும் பேசிக்கொள்ளவில்லையென அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டாவது கணவரும், குடும்பத்தை பிரிந்து வவுனியாவில் வசித்து வருகிறார்.

வெளிநாட்டிலுள்ள மகள் பற்றிய தகவல் இல்லாத நிலையில், அது குறித்து விசாரிப்பதற்காக கடந்த 14ஆம் திகதி கொழும்பு சென்று, தூதரகமொன்றுக்கு சென்று விசாரித்து விட்டு, 15ஆம் திகதி அதிகாலையில் வீடு திரும்பியுள்ளார்.

அவர் வீட்டுக்குள் வந்து, பயணப்பொதியை வைத்து விட்டு, குளியலறைக்கு சென்ற போது விழுந்து உயிரிழந்திருக்கலாமெனக் கருதப்படுகிறது. குளியலறை வாசலில் அவரது சடலம் காணப்பட்டது.

வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் கிராம சேவகருக்கு அறிவித்ததை தொடர்ந்து, பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸார்வீட்டுக்கு சென்ற போது, சடலம்உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது.

அவரது பயணப் பொதியில் இருந்த பணம் உள்ளிட்ட பொருட்கள் அப்படியே இருந்தன.

அதனால் இந்த மரணத்தில் குற்ற சம்பவம் இல்லையென பொலிஸார் நம்புகிறார்கள். எனினும், மரணத்திற்கான காரணத்தை உறுதிப்படுத்த விசாரணைகள் தொடர்கின்றன. (ம-7,10)


## பதவி வெற்றிடம்

- தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இருபாலாரும்)
- உதவி ஆசிரியர் (இருபாலாரும்)
- தகைமை:- க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்
- பொருத்தமானவர்கள் **076 097 3121** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- யாழ் நகரிலிருந்து 7Km தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும்.

- பொது முகாமையாளர்
வலம்புரி


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி தமிழ்ப் பாட ஆசிரியர்
**திருமதி.கலாராணி சுகர்ணராஜ்**
அவர்களின் அன்புத் தாயார்

### நடராசா சரஸ்வதி



அவர்கள் மறைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அவரது மறைவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


கல்லூரிச் சமூகம்
யா/ மகாஜனக் கல்லூரி

(C-0673)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கப்பட மாட்டாது

## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை



(கொழும்பு)

தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கப்படமாட்டாதென தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

42000 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், பேராசிரியர் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இருமடங்கு கூடுதலாக இவ்வாண்டு தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கான பற்றாக்குறை, இம்மாத இறுதி அலலது அடுத்த மாத நடுப்பகுதி வரை தொடருமென நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடியதாக சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேங்காய் எண்ணெய் கொண்டுவருவதற்கான கொள்கலன் பற்றாக்குறை மற்றும் கப்பல் போக்குவரத்தின் தாமதம் என்பன இந்த நிலைமைக்கு காரணம்.

அது மாத்திரமன்றி இலங்கைக்கு தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபட்ட பிலிப்பைன்ஸ் நிறுவனம் மூடப்பட்டுள்ளமையும் இதற்கான காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமை தொடர்பான முழுமையான அறிக்கையை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-6)

### பறவைக் காய்ச்சல் எதிரொலி

# விலங்கு உற்பத்தி பொருட்களின் இறக்குமதிக்கு தடை விதிப்பு

(கொழும்பு)

**பறவைக் காய்ச்சல் பதிவாகியுள்ள எந்தவொரு நாட்டிலிருந்தும் விலங்குகள் அல்லது விலங்கு சார்ந்த உற்பத்தி பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இதேவேளை பல நாடுகளில் மீண்டும் தலைதூக்கி யுள்ள பறவைக் காய்ச்சல் நோய்க்கிருமி நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும் எனவும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

அத்துடன் முதன்முறையாக அமெரிக்காவில் கால்நடைகளுக்கு இடையில் இந்த நோய் பதிவாகியமை மிகவும் ஆபத்தான நிலை என்றும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டில் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதால் பறவைக் காய்ச்சல் குறித்து தேவையற்ற அச்சம் கொள்ள தேவையில்லை எனவும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவல மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# சா/த பரீட்சைப் பெறுபேறுகள் 10 நாட்களுக்குள் வெளியிட திட்டம்

## பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் 10 நாட்களுக்குள் வெளியிடத் திட்டமிட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தை தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாரத்திற்குள் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட முயற்சிப்பதாகவும், இந்த வாரத்துக்குள் முடியாவிட்டால், வாரம் முடிந்து இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பிறகு பெறுபேறுகளை வெளியிடப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பரீட்சை முடிந்து ஒன்றரை மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் முடிவுகளை வெளியிடவிருப்பது கல்வித்துறையின் வெற்றிகரமான மைல்கல்களில் ஒன்றாகவே பார்க்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த மே மாதம் தொடங்கி மே 15 ஆம் திகதியே முடிவடைந்த சாதாரண தர பரீட்சையில் 527 பரீட்சை நிலையங்களில் 452,979 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக சதாசிவம் வியாழேந்திரன் நியமனம்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி செயலகத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில், நேற்று அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.(நி-6)

# முறையான நிதிக்கொள்கை இலங்கையில் இல்லை

## நீதி அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்டு சம்பாதிக்கும் பணத்தை பறிமுதல் செய்வதற்கான புதிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

நான்கு நாள் கைத்தொழில் கண்காட்சியுடன் இணைந்து கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் தெரிவித்தார். கடந்த முப்பது வருடங்களாக இலங்கையில் முறையான நிதிக் கொள்கை இல்லை என தெரிவித்த அமைச்சர், அதனை அடிப்படை விடயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் நாட்டின் நான்கில் ஒரு பகுதி மக்கள் நிகர நிதி நிறுவனங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# புலிகள் மீதான தடை நீடிப்பு; இலங்கை அரசு வரவேற்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை தொடர பிரித்தானியா எடுத்த முடிவை இலங்கை வரவேற்றுள்ளதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இதன்படி தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை பிரித்தானியாவில் தொடரும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வட கிழக்கு இலங்கையில் சுதந்திர தமிழ் அரசை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கமே, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு பிரித்தானியாவிடம் விண்ணப்பித்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், பிரித்தானியாவில் தடை செய்யப்படவில்லை. அது வன்முறையற்ற வழிமுறைகளின் மூலம் அரசியல் மற்றும் கருத்தியல் நோக்கங்களைத் தொடர முயற்சிக்கும் காரணத்தினால் அதனை அந்த நாடு தடை செய்யவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பின் அணுகு முறையும் மூலோ



பாயமும், வெளிநாட்டு அரசாங்கங்களை விடுதலைப் புலிகளின் தடையை நீக்கச் செய்வதன் மூலம் அந்த அமைப்பை புத்துயிர் பெறச் செய்வதாகும் என வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# வடமாகாண நீச்சல் போட்டி சம்பியனானது யாழ்.மாவட்டம்




வடமாகாண மட்ட நீச்சல் போட்டியில் யாழ். மாவட்ட வீர வீராங்கனைகள் 66 பதங்களை கைப்பற்றி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

மாவட்டங்களுக்கு இடை யிலான ஆண்கள், பெண்க ளுக்கான மாகாண மட்ட நீச் சல் போட்டி கடந்த சனிக் கிழமை கிளிநொச்சி நீச்சல் தடாகத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்டம் ஆண்கள் பிரிவில் 15 தங்கப்பதக்கங்கள், 10 வெள்ளி பக்கங்கள், 14 வெண்கல பதக்கங்கள் உட்பட 39 பதக்கங்களையும், பெண்கள் பிரிவில் 12 தங்கப்பதக்கங்கள், 8 வெள்ளிப்பதக்கங்கள், 7 வெண்கலப்பதக்கங்கள் உட்பட 27 பதக்கங்களையும் கைப்பற்றி முதலாமிடத்தை பெற்றனர்.

கிளிநொச்சி மாவட்டம் ஆண்கள் பிரிவில் 2 தங்கப் பதக்கங்கள், 6 வெள்ளிப்பதக் கங்கள், 1 வெண்கலப் பதக்கம் உட்பட 9 பதக்கங் களையும், பெண்கள் பிரிவில் 3 தங்கப்பதக்கங்கள், 7 வெள் ளிப்பதக்கங்கள், 2 வெண்கல பதக்கங்கள் உட்பட 12 பதக் கங்களையும் பெற்று இரண் டாம் இடத்தையும், முல்லைத் தீவு மாவட்டம் ஆண்கள் பிரிவில் ஒரு வெள்ளிப்பதக் கத்தை பெற்று மூன்றாம் இடத்தையும், மன்னார் மாவட்டம் ஆண்கள் பிரிவில் ஒரு வெண்கலப்பதக்கத்தை பெற்று நான்காம் இடத்தையும் பெற்றுள்மை குறிப்பிடத்தக் கது. (நி-6-90)

## தேசிய மட்ட பளு தூக்கல் நடேஸ்வராவுக்கு தங்கப் பதக்கம்



தேசிய மட்ட பளு தூக்கல் போட்டியில் நடேஸ்வராக் கல் லாரிக்கு தங்கப் பதக்கம்.

தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான இலங்கை பளு தூக்கல் சங்கம் நடத்திய பளு தூக்கல் போட்டி கண்டி பிலிமந்த லாவ மத்திய மகா வித்தியாலயத்தில் அண் மையில் இடம் பெற்றது.

இதில் 20 வயது ஆண்கள் பிரிவில் எல்.லஜிந்தன் 67 கிலோ எடைப் பிரிவில் 162 கிலோ எடையினைத் தூக்கி முதலாம் இடம் பெற்று சாதனை படைத்தமை குறிப்பிடத்தக் கது, (நி-6)

## சர்வதேச தர வேகமான நீர்த்தேடல் மற்றும் மீட்புப் பயிற்சி



இலங்கை அனர்த்த முகாமைத் துவத்திற்கான ஆசிய பசுபிக் கூட்டமைப்பு இன்று முதல் நாளை மறுதினம் வரை கித்துல்கலவில் நடைபெறவுள்ள வேகமான நீர்த்தேடல் மற்றும் மீட்புப் பயிற்சியுடன் பேரிடர் எதிர்கொள் திறன் களை மேம்படுத்துவதற்கான பயிற்சி யினை ஒழுங்கமைத்துள்ளது.

ஏழு நிபுணத்துவம் வாய்ந்த சர்வ தேச பயிற்சியாளர்களினால் குறித்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தேர்ந் தெடுக்கப்பட்ட 24 பேர் கொண்ட குழுவிற்கு மூன்று நாள் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியானது விரைவான நீரில் வழிசெலுத்துதல், மேம்பட்ட மீட்பு நுட் பங்களில் தேர்ச்சி பெறுதல் மற்றும் நிஜ வாழ்க்கைக் காட்சிகளை உருவகப் படுத்துவதற்கான இரவு நேரப் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமை யும்.

சர்வதேச அளவில் ஏற்றுக் கொள் ளப்பட்ட இரண்டாம் நிலை வேகமான நீர்த்தேடல் தர நிலைகளைக் கடைப் பிடித்து, திடீரெனத் தொடங் கும் பேரிடர் களுக்கான பேரிடர் பதிலளிப்பு முறை களை கண்டறிந்து மேம்படுத்துவதே பயிற்சியின் முதன்மை நோக்கமாகும். APAD சிவில்-இராணுவ மற்றும் தனி யார் துறை ஒத்துழைப்பை வளர்ப் பதுடன் ஆசிய பசிபிக் பிராந்தியம் முழு வதும் பேரிடர் பதிலில் சிறந்து விளங் குகிறது. அதே வேளை, விரை வான நீர் அவசர நிலைகளுக்கு பதில ளிக்கவும், அவர்களின் நிபுணத்து வத்தை மற்ற வர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் தயா ராக உள்ள திற மை யான நிபுணர் களை உருவாக் குவ தையே நோக்க மாகக் கொண்டு இப் பயிற்சி நெறி நடத்தப் படுகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வலயமட்ட எல்லே போட்டி சம்பியனான வாதரவத்தை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய மட்ட எல்லே போட்டியில் ஆண்,பெண் பிரிவில் சம்பியனான யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம் கடந்த புதன்கிழமை சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியில் கலந்து கொண்ட வாதரவத்தை அணி அரையிறுதிப் போட்டியில் புத்துார் சோமஸ்கந்த கல்லூரியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் யாழ்.வலய எல்லே போட்டியில் ஆதிக்கம் செலுத்தி வந்த சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர்கொண்டது.

பலம்மிக்க இரு அணிகள் மோதிக் கொண்ட அப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இறுதிப்போட்டியில் வாதரவத்தை, கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வாதரவத்தை 3 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் தஜிந்தன் இரண்டு ஓட்டங்களையும் துவாரகன் ஒரு ஓட்டத்தையும் பெற்றுக் கொண்டனர்.

4 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டு ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொள்ள வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய ஆண்கள் அணி வலயமட்ட சம்பியனானது.

அதேவேளை பெண்களுக்கான எல்லே போட்டியில் முத்துத்தம்பி வித்தியாலய அணியை அரையிறுதியில் எதிர்கொண்ட வாதரவத்தை விக்னேஸ்வர அணியை வீழ்த்தி வெற்றியொன்றின் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி இருந்தது.இறுதிப் போட்டியில் சோமஸ் கந்த அணியை எதிர்த்து வாதரவத்தை அணி மோதியது.

வழங்கப்பட்ட 30 பந்துகளில் வாதரவத்தை அணியின் ஈ.கௌதமி மற்றும் ஜபர்ணா ஆகியோர் தலா ஒவ்வொரு ஓட்டத்தை பெற்றுக் கொடுக்க 3 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய புத்தூர் சோமஸ் கந்தக்கல்லூரி வீராங்கனை யாழ்நிலா 2 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள போட்டி சமனிலையானது.சமனிலை தவிர்ப்புக்காக 5 பந்துகள் வழங்கப்பட்டது.

5 பந்துகளிலும் எந்த வித ஓட்டங்களையும் சோமஸ்கந்த அணி பெற்றுக் கொள்ளவில்லை ஒரு ஓட்டம் பெற்றால் வெற்றி என்ற நிலையில் வாதரவத்தையின் நிருசா என்ற வீராங்கனையால் ஒரு ஓட்டம் பெற்றுக்கொள்ள வாதரவத்தை விக்னேஸ்வர பெண்கள் அணி வலய மட்ட சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)





# அடுத்த வருடம் முதல் விவசாயிகளுக்கு இலவச உரம்

## விவசாய அமைச்சர் தகவல்

(கொழும்பு)

அடுத்த வருடத்தில் இருந்து 2 பருவங்களுக்கும் விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.


அதன்படி, அடுத்த மாதம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய உரங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

தற்போது நாட்டில் உரத் தட்டுப்பாடு இல்லை.

விற்பனை செய்ய முடியாத அளவுக்கு உரங்கள் கையிருப்பில் இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

2022 இல், நாட்டிற்கு அதிக அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. 2023ஆம் ஆண்டு அரசாங்கம் வழங்கிய சலுகைகளைப் பயன்படுத்தி விவசாயிகள் மிகவும் சிரத்தையுடன் பயிரிட்டதால் அரிசி இறக்குமதி வெகுவாகக் குறைந்தது.

இந்த ஆண்டும் அரிசி இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவில் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. மேலும் உள்ளூர் அரிசியை மக்கள் அதிகமாக உட்கொள்ளும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-6)



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட- வரலாற்றுத் துறையை சேர்ந்த மாணவர்களின் உள்ளக பயிற்சிக்கான நூலக அறிமுக நிகழ்வு அண்மையில் யாழ்.சுண்டிக்குழியில் அமைந்துள்ள நூலக நிறுவனத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி சாந்தினி அருளானந்தம், வரலாற்றுத் துறையை சேர்ந்த மாணவர்கள், நூலக நிறுவன பிரதம நிறைவேற்று அலுவலர், துறைசார் தலைவர்கள் மற்றும் நூலகப் பணியாளர்களும் கலந்துகொண்டனர். (படம்-சுபேசன்)

# இராசிபலன்

**25.06.2024**
**ஆனி 11, செவ்வாய்க்கிழமை**
**சதுர்த்தி பின்னிரவு 1.27 மணிவரை**
**திருவோணம் பிற்பகல் 4.55 மணிவரை**

**சுபநேரம் -10.25-11.55 மணிவரை**
**இராகு காலம்-2.55-4.25 மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி விரதம்,**

**சந்திராஷ்டமம்.**
**மிருகசீரிடம்,திருவாதிரை.**

**வளவன்**




பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் கூடும்.




பாராட்டும் புகழும் கூடும் நாள், தொட்ட காரியங்கள் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய விடயம் முடிவில் ஆதாயம் தரும்.




குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் தீரும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ரோக பயமுண்டு, தொழில் நலன்க்ருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.




பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் எண்ணம் உருவாகும், முயற்சிகள் கைகூடும்.




சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வளர்ச்சி கூடும் நாள்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள்.




உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், வேலைச் சுமை கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.




அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடிவரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெளியூர்ப் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**உன்மீது நம்பிக்கை வைப்பவர் மீது அதிக நேரத்தைச் செலவிடு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வெளிநாட்டு கற்கை மையத்தின் 3 ஆவது அமர்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வெளிநாட்டு கற்கை மையம் ஏற்பாடு செய்துள்ள "Education யாழ்ப்பாணம்" மூன்றாவது அமர்வு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா பொது நூலகத்திலும் மறுநாள் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்திலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு வடக்கு மாகாணத்தில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி மற்றும் மால்டா ஆகியநாடுகளில் உள்ள கல்வி தொடர்பான தெரிவுகளையும், விருப்பங்களையும் ஆராய்வதற்கான வாய்ப்புகளை வழங்கும் முயற்சியின் மூன்றாவது கட்டமாகும்.

இங்கு முதன்மைப்படுத்தப்படுகின்ற கற்கைகளுக்காக் நாடுகள் பாரிய பணச் செலவுகளை ஏற்படுத்தாத வகையிலும், நிதி பங்களிப்புகள் சலுகை அடிப்படையில் வசதிகளை ஏற்படுத்தும் வகையிலும் அறிமுகப்படுத்துகின்றன. குறிப்பாக மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்கள், விண்ணப்பதாரர்களின் வசதியைக் கருத்திற்கொள்வதுடன் இந்தச் சந்தர்ப்பம் ஒருசொற்ப அளவிலேயே "Education யாழ்ப்பாணம் மூலம் கிடைக்கும்சில தனித்துவமான வாய்ப்புகளாகும்

"Education யாழ்ப்பாணம்" நிகழ்ச்சித்திட்ட த்தின் சிறப்பு அம்சம் தலைநகர் மற்றும் கற்கை வசதிகளை கொண்ட பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புகளை, வடக்கு மாகாணத்திலுள்ள தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுடன் பகிர்ந்து கொள்வதேயாகும். இலங்கையர் அனைவருக்கும் சமமான கல்விகிடைக்க ICFS எப்போதும் உறுதி பூண்டு செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.' (நி-6)

# சடலத்தை உரிமை கோரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த 14.06.2024 அன்று இறந்த நிலையில் தகவல் ஏதும் கிடைக்கப் பெறாத உரிமை கோரப்படாத ஆணின் சடலம் ஒன்று ஒப்படைக்கப்பட்டு உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த உடலை இது வரை எவரும் உரிமை கோரவில்லை.

இவரின் உடலை அடையாளம் காட்டி 14 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனை. பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# குறைவடைந்துள்ள பணவீக்கம்
## புள்ளி விபரத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, இலங்கையின் பணவீக்கம் 2.7% இலிருந்து மே 2024 இல் 1.6% ஆகக் குறைந்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது

இதேவேளை ஏப்ரல் 2024 இல் 3.3% ஆக இருந்த உணவு வகையின் வருடாந்திர புள்ளி பணவீக்கம் மே 2024 இல் 0.5% ஆகக் குறைந்துள்ளது.மேலும் , 2024 ஏப்ரலில் 2.3% ஆக பதிவாகியிருந்த உணவு அல்லாத வகையின் பணவீக்கம் 2024 மே மாதத்தில் 2.4% ஆக சிறிதளவு அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-6)

# நீதி மன்ற சுயாதீனத்திற்கு சவால் விடுக்கும் நீதியமைச்சரின் பொறுப்பற்ற கருத்துக்கள்

(கொழும்பு)

நீதியமைச்சர் நீதிமன்ற கட்டமைப்பு தொடர்பில் விமர்சித்து முன்வைத்த பொறுப்பற்ற கருத்துக்கள் நீதிமன்ற சுயாதீனத் தன்மைக்கு சவால் விடுப்பதாக, இலங்கை மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்களை உள்ளடக்கிய இலங்கை நீதிச் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது, அரசியல் ரீதியிலான தமது இருப்பை சவாலுக்கு உட்படுத்தும் வழக்குகளின் போது நீதிமன்றத்தின் சட்டத் திறகமைவான தீர்ப்புகள் காரணமாக அதிருப்தி அடைந்ததால் அமைச்சர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற தீர்ப்புகளால் திருப்தி அடையாதவர்கள் அரசியலமைப்பின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நடைமுறைக்கு செல்லாமல் பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்குள் மறைந்து நீதிமன்றத்தை அவதூறு செய்வது ஜனநாயக சமூகத்தின் அடிப்படையான நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு பகிரங்கமாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பக்கச்சார்பற்ற நீதிபதிகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கான திட்டமொன்று படிப் படியாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதை தாம் அவதானிப்பதாக, இலங்கை நீதிச் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-6)



தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நேற்று கல்லூரி அதிபர் இ.புஸ்பரட்ணம் தலைமையில் இடம்பெற்றது. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அரங்கேறியிருந்தன. (படம் -ஈச்சமோட்டை தெய்வீகன்)

# மொழிபெயர்ப்பு டிப்ளோமா பாட நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்


(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மொழிபெயர்ப்பு டிப்ளோமா பாட நெறிக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

இம் மொழிபெயர்ப்பு பாட நெறி தமிழ் மற்றும் சிங்களம் என இரு கற்கை நெறியாக அரச கரும மொழித் திணைக் களத்துடன் இணைந்து நடத்தப்படவுள்ளதாகவும் ஒருவருட காலத்தைக் கொண்ட கற்கை நெறியாக நடைபெறவுள்ளது.

இக் கற்கை நெறிக்கு 18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.


இம் மொழிபெயர்ப்பு பாட நெறி தொடர்பான மேலதிக தகவல்களை 077 990 7865 என்ற தொலைபேசியூடாக ஒருங்கிணைப்பு உதவியாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (நி-6)



இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பண்பாட்டு மையத்தில் யோகா நிகழ்ச்சி இடம்பெற்றது. மாணவர்கள், பொதுமக்கள் என 1200 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர். (படம் -சிவசாந்தன்)



சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ விரமாகாளி அம்பாள் ஆலய தேர் திருவிழாவை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை வீரமாகாளி அம்பாள் அறப்பணி நிதியத்தால் மடிக்கணனி வழங்கி வைக்கப்பட்டது. (படம்- சிவசாந்தன்)



போதைப்பொருள் தடுப்பு தொடர்பான செயலமர்வு அண்மையில் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. பூநகரி பிரதேச பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் மாணவர்களுக்கு இது தொடர்பில் தெளிவூட்டியிருந்தார். (படம்-சுபேசன்)

# அரங்கு திறப்பும் பரிசளிப்பு விழாவும்

(கரணவாய்)

யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் சதாசிவம் அரங்கு திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு சதாசிவம் அரங்கில் பாடசாலை அதிபர் ந. நந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை பழைய மாணவன் சதாசிவம் கருணாகரன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுஞ்செய்தி மற்றும் சமூக ஊடக மோசடிகள் பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களை இலக் காகக் கொண்டு குறுஞ்செய்தி மற் றும் சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக் குமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு பொதுமக்களை எச்சரித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்ட குறித்த குழு, பல்வேறு வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களால் அனுப் பப்படும் போலிச் செய்திகள் குறித்து பொதுமக்களை கவனத்தில் கொள் ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த குழுவின் கூற்றுப்படி, "குறித்த மோசடிகள், நன்கொடை கள், பணப் பரிசுகள், அதிர்ஷ்டக் குலுக்கல்கள் மற்றும் வேலைக் காப்பீடு போன்றவற்றில் சட்டபூர்வ மான நிறுவனங்களின் பெயரைப் பயன்படுத்தி ஈடுபடுகின்றன.

இந்நிலையில் சைபர் குற்ற வாளிகள் போலி இணைய தளங்கள், சமூக ஊடக தளங்கள், குறுஞ்செய்தி மற்றும் வாட்ஸ்அப் மூலம் தனிநபர்களைத் தொடர்பு கொள்ள முயற்சிக்கின்றனர்.

பாவனையாளர்கள் செய்தியில் வழங்கப்பட்ட இந்த இணைப்பு களை அணுகுவதன் மூலம், அவர்கள் கணினிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளில் இருந்து தரவுகளை திருடலாம், இது பல்வேறு வகையான நிதி மோசடிகளுக்கு வழிவகுக்கும் என்று எச்சரித்துள்ளது.

மேலும் அண்மைக் காலங் களில் குறிப்பாக தேசிய மற்றும் மத விழாக்களை மையமாக வைத்து இவ்வாறான மோசடிகள் கணிசமான அளவு அதிகரித்துள் ளதாக இலங்கை கணினி அவ சர தயார்நிலைக் குழு தெரிவித்துள் ளது. (நி-6)


**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1328)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615 6719**

WESTERN UNION WU, MoneyGram, Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


# பெருமளவில் லாபமீட்டும் தனியார் வகுப்புகள்

## பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தனியார் வகுப்புக் களின் மூலமான வருடாந்த வருமானம் சுமார் 200 பில்லியன் ரூபாய் என பேரா தனை பல்கலைக்கழகத்தின் பொரு ளியல் விஞ்ஞான மற்றும் புள்ளி விபரவியல் பிரிவு பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தனியார் வகுப்புக்கள் தொடர்பில் உடன் ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள் ளார்.

நாட்டின் ஒட்டு மொத்த பாடசா லைக் கட்டமைப்பி னையும் பின் தள்ளி தனியார் வகுப்பு கலாசாரம் தலைதூக்கியுள் ளது.

தனியார் வகுப் புகள் ஒழுங்குப டுத்தப்படாவிட்டால் அது மாணவர் களை மோசமாக பாதிக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி-6)


**சான்றிதழ்கள் அச்சடித்தல்**

சைவபரிபாலன சபையின் அகில இலங்கை தேர்வுகளுக்கான சான்றிதழ்கள் அச்சுபதிக்க வேண்டியுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் அதற்குரிய விபரங்களை சபை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிவு திகதி 01.07.2024.

(1322) தொடர்பு: 021 222 7678

**உதவி பெண் பணியாளர் தேவை**

அலுவலக உதவி பெண் பணியாளர் தேவை. கணக்கியலும் கணினி அனுபவமும் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிபரக்கோவையை சைவ பரிபாலன சபை, இல.66 கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(1322) தொடர்பு: 021 222 7678

கைகளுக்கும் மனதுக்கும் நிறைவைத் தரும் சிறிய அளவிலே நன்மைகள் அதிகம்

நாளாந்த செலவுகளுக்கு

**அத சம்பத**



ஆங்கில எழுத்துக்கு ரூ.80

02 இலக்க நிரைக்கு ரூ.1,000

03 இலக்க நிரைக்கு ரூ.4,000

04 இலக்க நிரைக்கு ரூ.50,000

ஆங்கில எழுத்து மற்றும் 04 இலக்கங்களுக்கு ரூ.250,000

நாளாந்த செலவுகளுக்கு அத சம்பதவை அதிகமதிகம் கொள்வனவு செய்யுங்கள்

(சி-2323)

NLB தேசிய லொத்தர்

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 79 1/4
12 இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L , தபால் ஊழியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் விரும்பத்தக்கது
தொ.இ: B/1850

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 53
3 இல் செவ்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Electrical and Electronic Engineer, Bussiness
எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/10207

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 10 ½
2 இல் சூரி செவ் உயரம்:5'10"
தகைமை/தொழில்: Bsc, Engineer
எதிர்பார்ப்பு: Degree and Diploma
தொ.இ: B/13284

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 40
7 இல் செவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்: சாதாரண தரம்
எதிர்பார்ப்பு: சுய தொழில் புரிவோர்
தொ.இ: G/9363

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: உத்திராடம்
கி.பா: 17
1 இல் செவ் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு, தகுந்த வரன்
தொ.இ: G/12110

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: அனுஷம்
11 இல் செவ் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Bsc, Unior Excutive
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Lecturer
தொ.இ: G/13874

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## காலிஸ்தானி பயங்கரவாதிக்கு கனடா பாராளுமன்றம் கௌரவம்

### இந்தியா கடும் கண்டனம்

(டில்லி)

காலிஸ்தானி ஆதரவு பயங்கரவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜாருக்கு, கனடா பாராளுமன்றம் கௌரமளித்தது தொடர்பாக இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் இறையாண்மைக்கு எதிராகவும், பிரிவினைக்கு ஆதரவாகவும் செயற்படும் பயங்கரவாத குழுக்களுக்கு கனடா தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. கனடாவின் இத்தகைய போக்குக்கு எதிராக இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்தும் வருகிறது.

இந்த வகையில் கடந்த ஆண்டு கனடாவில் கொல்லப்பட்ட காலிஸ்தானி பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் நினைவாக அண்மையில் .கனடா பாராளுமன்றம் ஒரு நிமிடம் மௌனம் கடைப்பிடித்தது.

சபாநாயகர் கிரெக் பெர்கஸ் அறிவிப்பை அடுத்து எம்.பிக்கள் அனைவரும் மௌனம் கடைப்பிடித்த நிகழ்வு காணொளியாக வெளியாகி இந்தியாவை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

பயங்கரவாதக் குழுவான 'காலிஸ்தானி டைகர் ஃபோர்ஸ்' என்ற அமைப்பைச் சேர்ந்த நிஜ்ஜார் இந்தியாவின் பயங்கரவாத தடுப்பு அமைப்பான என்ஐஏ ஆல் தேடப்பட்ட நபராவார். கடந்த ஜூலை மாதம், பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் இந்து சாமியார் ஒருவர் கொல்லப்பட்ட வழக்கில் நிஜ்ஜாரின் தலைக்கு ரூபாய் 10 லட்சம் ரொக்கப் பரிசு அறிவித்திருந்தது. இது தவிர்த்தும் பல்வேறு வழக்குகள் நிஜ்ஜாருக்கு எதிராக இருந்தன. இந்த நிஜ்ஜாருக்கு கனடா பாராளுமன்றம் கௌரவம் அளித்ததை, "பயங்கரவாதத்திற்கு அரசியல் இடம் கொடுக்கும் மற்றும் வன்முறைக்கு ஆதரவளிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் இயல்பாகவே இந்தியா எதிர்க்கும்" என்று வெளியுறவு அமைச்சகம் தனது வாராந்திர செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளது.


முன்னதாக நிஜ்ஜாரின் கொலை சம்பவத்தை முன் வைத்து இந்தியா - கனடா இடையிலான சுமூகம் கெட்டது. கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தங்கள் தேசத்து குடிமகனான நிஜ்ஜாரைக் கொன்றதில் இந்திய அரசின் ஏஜெண்டுகள் ஈடுபட்டதாக குற்றம்சாட்டினார். அந்த குற்றச்சாட்டுகள், இரு நாடுகளுக்கும் இடையே பதற்றமான சூழலுக்கு வழி வகுத்தது.

கனடாவின் குற்றச்சாட்டுகளை இந்தியா உறுதியாக நிராகரித்ததோடு, அவற்றை அபத்தமானது என்றும் அழைத்தது. குறிப்பாக 'இந்தியாவுக்கு எதிரான தனது குற்றச்சாட்டுக்கு வலுசேர்க்க எந்த வகையான ஆதாரத்தையும் கனடா இன்னும் வழங்கவில்லை' என்றும் சாடியது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தாய்வானுக்கு சுதந்திரம் பெற்றுத் தர போராடுபவர்களுக்கு மரண தண்டனை

### எச்சரிக்கை விடுக்கும் சீனா

(தாய்பெய்)



தாய்வானின் சுதந்திரம் குறித்து தீவிர நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக நீதிமன்றங்கள், சட்ட அமுலாக்க அமைப்புகள் உள்ளிட்டவற்றுக்கு அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சீனாவிடமிருந்து, தாய்வானுக்கு சுதந்திரம் பெற்றுத் தரவேண்டும் என தீவிரமாக செயற்படுபவர்களுக்கு எதிராக பிரிவினைவாதச் சட்டத்தின் கீழ் குறிப்பாக, சுதந்திரம் கோரும் அமைப்புகளின் தலைவர்களுக்கு, மரண தண்டனை விதிக்கப்படும் என சீன அரச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 1949 ஆம் ஆண்டில் முடிந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர், தாய்வான் பிரதேசம் சுதந்திரமாக செயற்பட்டு வருகிறது.

எனினும், அந்தத் தீவை தங்கள் நாட்டின் ஒரு பகுதியாகவே சீனா கருதுகிறது. தாய்வானும் தன்னை தனி நாடாக இதுவரை பிரகடனப் படுத்திக்கொள்ளவில்லை.

இந்நிலையில், தாய்வானை எப்போது வேண்டுமானாலும் தங்களுடன் இணைத்துக் கொள்ளும் உரிமை தங்களுக்கு உள்ளதாக சீனா கூறிவருகின்றது.

தேவையேற்படின், இராணுவ வலிமையைக் கூட இதற்காகப் பயன்படுத்தலாம் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சூழலில்,. தாய்வான் சுதந்திரத்தை தீவிரமாக வலியுறுத்தும் தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று சீனா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## காசா போரில் இஸ்ரேல் நிச்சயம் தோற்கும் ஈரான் கடும்தொனியில் எச்சரிக்கை



(டெஹ்ரான்)

காசா போரில் இஸ்ரேல் நிச்சயம் தோற்கும் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே நடக்கும் போரில், இஸ்ரேலுக்கு தேவையான பாதுகாப்பு ஆதரவை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

ஆனால், இதுபோன்ற போரில் இஸ்ரேல் நிச்சயம் தோற்கும் என ஈரான் தெரிவித்துள்ளது.

லெபனானைப் பாதுகாக்கும் அதே வேளையில் தனது சொந்த அமைப்பைப் பாதுகாக்கும் திறன் ஹிஸ்புல்லாவுக்கு உண்டு என்றும் ஈரான் கூறுகிறது.

இதற்கிடையில் இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சர் இஸ்ரேல் கெட்ஸ் சமீபத்தில் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லாவுக்கு என எச்சரிக்கை விடுத்தார்.மேலும் ஹிஸ்புல்லாவால் இஸ்ரேலுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு பதிலளிக்க தேவையான முடிவுகள் விரைவில் எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். (நி-6)

## பூமியை...

## விளை...

### நாசா...


(வோஷிங்டன்)

பூமிக்கு அதி... அஞ்சப்படும் வி... வாய்ப்புகள் இரு... நிறுவனமான நா... பூமியில் ஏற்படு... தயாராகவில்லை... ஏற்படுத்தியுள்ளது...

கடந்த ஏப்ரல் மாதம் நாசாவால் ஒருங்கிணைக்கப்பட்டு, மாரிலாந்தில் உள்ள ஜான் ஹாப்கின்ஸ் ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட, கிரகங்களின் பாதுகாப்பு தொடர்பான சோதனையில், பூமிக்கு விண்வெளியிலிருந்து ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து...

## 1300 ஐக்... ஹஜ் உயிரி...

### திணறும் சவுதி...



(ஜெத்தா)

சவுதி அரேபியாவில் உள்ள புனித மக்காவுக்கு புனித பயணம் செல்வதை முஸ்லிம் மக்கள் தங்களின் வாழ்வியல் கடமைகளில் முக்கியமானதாக கருதுகின்றனர்.

இதனால் உலகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஆண்டுதோறும் மக்கா, மதீனாவுக்கு "ஹஜ்" புனித பயணம் செல்கின்றனர். அதன்படி இந்தாண்டு ஹஜ் பயணமாக மெக்காவில் சுமார் 18 லட்சம் முஸ்லிம்கள் குவிந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# யத் தாக்கப் போகும் புதிய விண்கல்

# அளவு விபரீதமாக இருக்கும்!

## சாவின் எச்சரிக்கையால் பரபரப்பு

டன்)

அதிக ஆபத்து விளைவிக்கக்கூடும் என்று ம் விண்கல் ஒன்று பூமியைத் தாக்க 72 சதவீத ர் இருப்பதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி ன நாசா எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த விண்கல் ற்படுத்தக்கூடிய பாதிப்பை தடுக்க இன்னும் நாம் ல்லை என்று நாசா எச்சரித்துள்ளது பரபரப்பை துள்ளது.



ஆராய்ச்சி செய்யப்பட்டது.

இந்த சோதனை தொடர்பான அறிக்கையை கடந்த ஜூன் 20 ஆம் திகதி நாசா வெளியிட்டுள்ளது.


அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, "உலகுக்கு வருங்காலங்களில் விண்கற்களால் அதிக ஆபத்து இருந்து வரும் நிலையில் அதிலிருந்து தற்காத்துக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோமா என்பதற்கு இந்த ஆராய்ச்சியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இந்த ஆய்வில் இதுவரை மனிதர்களால் கண்டறியப்படாத விண்கலம் ஒன்று பூமியை நோக்கி நகர்வதாகவும் இன்னும் 14 வருடங்களில் துல்லியமாக 2038 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி பூமியை தாக்கி அதிக சேதங்களை ஏற்படுத்த 72 சதவீதம் வாய்ப்புள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த விண்கலின் எடை, அளவு மற்றும் தன்மைகள் குறித்து ஆய்வில் தெரிந்து கொள்ள முடியவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது நாசாவின் எனப்படும் அதிநவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட முதல் ஆய்வாகும். விண்கற்களால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பூமியைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட தொழில்நுட்பமே DART. இதற்கிடையில், விண்கற்களை தொலைவில் இருந்து பார்க்க NEO Surveyor (Near-Earth Object Surveyor). எனப்படும் இன்பிராரெட் தொலைநோக்கியை நாசா உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஐக் கடந்த பிரிழப்புகள்

## சவுதி அரேபியா




இதனிடையே இந்த மாத தொடக்கத்தில் இருந்தே சவுதி அரேபியாவில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. குறிப்பாக மக்காவில் கடுமையான வெப்பஅலை வீசி வருகிறது. இதனால் ஹஜ் பயணம் சென்ற பலர் வெயில் தாக்கத்தை தாங்க முடியாமல் சுருண்டு விழுந்து உயிரிழந்தனர்.

இந்நிலையில் சவூதி அரேபியாவில் வெப்பஅலை காரணமாக 1300 ஹஜ் பயணிகள் உயிரிழந்துள்ளதாக சவுதி சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. (நி-6)

# வழிபாட்டுத் தலங்கள் மீது ரஷ்யாவில் தாக்குதல்

## 15 பேர் உயிரிழப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவின் வடபகுதியில் உள்ள டாகெஸ்தான் குடியரசில் கிறிஸ்தவ தேவாலயம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், மதகுரு உள்ளிட்ட 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் வடபகுதியில் உள்ள டாகெஸ்தான் பகுதியில் ஆயுதமேந்திய நபர்களினாலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. டெர்பெண்ட் மற்றும் மகச்சலா நகரங்களில் அமைந்துள்ள பெந்தகோஸ்மத பிரிவினரின் மதவழிபாட்டு நிகழ்வின் போது இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில், ஏழு பொலிஸார், மதகுரு பாதுகாப்பு உத்தியோகத்தர், பொது மக்கள் உட்பட 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்தோடு தாக்குதலினால் அங்குள்ள வாகனங்கள் மற்றும் சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்களில் ஆறு பேர் பொலிஸாரின் பதில் தாக்குதலினால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ரஷ்ய செய்திகள் தெரிவித்துள்ளன.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் யார் என்பது இதுவரை உறுதியாக தெரியவில்லை எனினும் கடந்த காலங்களில் டாகெஸ்தான், பல தடவைகள் இஸ்லாமிய தீவிரவாதிகளின் தாக்குதல்களை எதிர்கொண்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் இரண்டு கிறிஸ்தவ தேவலாயங்களும் யூதவழிபாட்டுதலமும் இலக்குவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்புநிறத்தில் உடையணிந்தவர்கள் பொலிஸாரின் வாகனத்தொடரணி மீது தாக்குதலை மேற்கொள்வதை காண்பிக்கும் காணொளிகளும் தற்போது வெளியாகியுள்ளன.

டெர்பெண்ட் என்ற பிரதேசத்தில், பலவருடங்களாக யூதர் வாழ்ந்து வரும் பகுதியில் உள்ள யூதவழிபாட்டுதலம் மீதும் கிறிஸ்தவ தேவாலயம் மீதும் தீவிரவாதிகளால் தொடர்ச்சியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசா தொடர்பான

## இலங்கையின் நிலைப்பாடு மாறாது

### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

காசாப் பகுதியில் இடம் பெற்றுவரும் மோதல்கள் தொடர்பாக இலங்கையின் நிலைப்பாடு ஒரு போதும் மாறாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துத் துள்ளார்

அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது, ஹமாஸ் சிக் கும் இஸ்ரேலுக்கும் பிரச் சினைகள் இருக் க லாம்.அதற்காக காசா மக்களை பழிவாங்க வேண்டாம். பாலஸ்தீன அர சாங்கத்தை நிறுவ வேண்டும் என்பதே எமது நிலைப் பாடா கும்

பாலஸ்தீனத்தில் ஏரா எமான மக்கள் கொல்லப் பட்டுட்டுள்ளனர்.இதனால் அதி ருப்தி அடைந்து இருக்கின் றோம். அதனை நாம் ஏற்றுக் கொள்ளவே முடியாது. காசா போரினால் பாதிக் கப்பட்ட குழந்தை களுக்காக காசா நிதி யத்தை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி முதலில் ஒரு மில் லியன் டொலரை வழங்க ஏற் பாடு செய்தோம். நாம் சிறிய நாடாக இருந்தாலும் வங்கு ரோத்து நிலையை அறிவித்து இருக்கும் வேளையிலும் ஒரு மில்லியன் டொலரை வழங்க முன் வந்திருக்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி-6)

# இரு பாரிய கஞ்சா செய்கை ட்ரோன்மூலம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

யால தேசிய பூங்காவில் மிக நுட்பமாக பயிரிடப்பட்ட இரண்டு கஞ்சா பயிர்ச் செய் கைகளை பொலிஸார் ட்ரோன் கமெரா தொழில் நுட்பத் தைப் பயன்படுத்தி கண்டு பிடித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிர டிப் படையின் உடவளவ முகாமைச் சேர்ந்த அதிகாரி கள் குழுவினால் இந்த நட வடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது 35 பேர்ச்சஸ் மற்றும் 25 பேர்ச்சஸ் பரப்பளவி லான காணியில் கஞ்சா பயி ரிடப்பட்டிருந்ததாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர் பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் மேலதிக விசார ணைகளை கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 350 | 200-300 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 120 | 150-180 | 200 |
| தக்காளி | 700 | 250 | 700 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 120 | 100-130 | 200 |
| கோவா | 350 | 330 | 300 | 350 | 300 |
| கரட் | 350 | 450 | 450 | 450 | 600 |
| பூசணி | 200 | 200 | 180 | 180 | 200 |
| புடோல் | 160 | 300 | 180 | 200 | 320 |
| வாழைக்காய் | 180 | 150 | 150 | 120-150 | 240 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 250-350 | 300-580 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 250 | 250 |
| பாகற்காய் | 1000 | 1000 | 1000 | 700 | 1200 |
| வெண்டைக்காய் | 200 | 300 | 200 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 300 | 250 | 300-350 | 350 |
| லீக்ஸ் | 600 | 650 | 700 | 450 | 800 |
| பீற்றூட் | 800 | 550 | -- | 600 | 800 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1400 | 1500 | -- | 600-1000 | 800 |
| போஞ்சி | 800 | 700 | 800 | 450 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 50 | 80 | 100 | 100-140 | 80 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 700 | 800-1000 | 1300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 450 | 450 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 500 | 450 | 500 | -- | 600 |
| முள்ளங்கி | 160 | 250 | 200 | 350 | 320 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | -- | 80 | 250 |

# இன்று ஒரு தகவல் 163



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# பந்த பாசம்

போதிவனம் அமைதியாக இருந்தது. காற்று லேசாக வீசிக்கிட்டிருக்கிறது. இலைகள் மெதுவா அசைந்து கொண்டிருக்கிறது! போதி சத்துவர் தியானத்திலே ஆழ்திருக்கிறார். கண்கள் மூடியிருக்கிறது! கொஞ்சத் தூரத்திலே ஒரு நடுத்தர வயது ஆசாமி. இவர் எப்ப கண்ணைத் திறந்து பார்ப்பார் என்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தான். கொஞ்ச நேரம் ஆகியது. போதிசத்துவர் மெதுவாக கண்ணைத் திறந்தார். இவன் உடனே அவர் காலிலே விழுந்து வணங்கினான். உன் பெயர் என்னப்பா? என்று கேட்டார் சத்துவர். அபிநந்தன்! என்றான் அவன். உனக்கு என்ன வேணும் எனக் கேட்டார்.

தேவா! நான் ஒரு ஏழை. எனக்கு ஒரு மனைவி மூன்று பிள்ளைகள். பந்த பாசங்களில் மாட்டிக்கொண்டு நான் சித்திரவதைகளை அனுபவித்து விட்டேன். அது தான் உங்களிடம் வந்தேன். நீங்கள் தான் என்னைத் துறவியாக்க வேண்டும். ஞான மார்க்கத்தைக் காட்ட வேண்டும்! என்றான். போதிசத்துவர் கொஞ்சம் யோசிச்சார். அதன்பின் மெதுவாக சொன்னார். அபிநந்தா! இந்த மரங்களிலே இருக்கிற இலைகளைப் பார்! இதெல்லாம் ஏன் ஆடுது தெரியுமா. காற்று வந்து மோதுது.. அதுதான் ஆடுது! பாசம் என்கிற காத்து வந்து மோதும் போதெல்லாம் மனித இலைகள் இப்படித்தான் ஆடும்! முதலிலே உன்னோட மனசுல இருக்கிற பாசத்தை அறவே விட்டிடனும்! அது முடியுமா உன்னாலே! என்று கேட்டார். முடியும்! என்றான் இவன். சரி அப்படி என்றால் நீ இன்றிலே இருந்து இந்த போதி வனத்திலேயே தங்கலாம்! என்று சொல்லிவிட்டார் போதிசத்துவர். அபிநந்தன் அங்கேயே தங்கினான். கொஞ்ச நாட்களின் பிறகு போதிசத்துவர் குளிப்பதற்காக போய்க்கொண்டிருந்தார். வழியிலே அபிநந்தனைக் கவனித்தார். அவன் பக்கத்திலே ஒரு நாய்க்குட்டி இருப்பதைப் பார்த்தார். என்னப்பா இது நாய்க்குட்டி என்றார். பிரபு அந்த நாய் எப்போதும் என்னை விட்டு விலகுவதே இல்லை! இதை மட்டும் கூட வைத்திருப்பதற்கு அனுமதி தாருங்கள் என்றான்.

போதி சத்துவர் சிரித்துக்கொண்டே போய்விட்டார். கொஞ்ச நாட்கள் ஆகியது இவர் போய்க்கொண்டிருக்கும் வழியிலே அபிநந்தனைப் பார்த்தார். அபிநந்தன் நின்று கொண்டிருந்தான். அவன் பக்கத்திலே அந்த நாய்க்குட்டி நின்றுகொண்டிருந்தது. அந்த நாய்க்குட்டிக்குப் பக்கத்திலே ஒரு சின்னப் பையன் நின்றுகொண்டிருந்தான். அபிநந்தா யார் இந்த சின்னப் பையன் என்று கேட்டார். பிரபு இவன் என் மகன். இந்த நாயை விட்டு இவனால் இருக்க முடியாது. அதனாலே இவனை மட்டும் என இழுத்தான். போதி சத்துவர் இப்போதும் சிரித்துக்கொண்டே போய்விட்டார்.

இன்னும் கொஞ்ச நாட்களின் பின் போதிவனக் குளத்துக்குப் பக்கத்திலே ஒரு பெண்ணை போதிசத்துவர் பார்த்தார். அபிநந்தா யார் இந்த பெண் என்று கேட்டார். தேவா இவள் என்னுடைய மனைவி! என் மகனை விட்டு இவளாலே இருக்க முடியாது. அதனால் இவளையும் என இழுத்தான் போதிசத்துவர் சிரித்தார் சிரித்துக்கொண்டே இரண்டு பாத்திரங்களை எடுத்தார். ஒரு பாத்திரத்திலே நிறையப் பண்டங்கள் இருந்தது. இன்னொரு பாத்திரம் காலியாக இருந்தது. பண்டங்கள் இருந்த பாத்திரத்தை தண்ணியிலே விட்டார். அது அப்படியே மூழ்கி அடியிலே போய்விட்டது.

காலிப் பாத்திரத்தை தண்ணியிலே விட்டார். அது மிதந்து கொண்டே இருந்தது.போதி சத்துவர் சொன்னார் கனமான பாத்திரம் அமிழ்ந்து போய்விட்டது. காலியான பாத்திரம் மிதக்கின்றது. காலிப் பாத்திரம் இருக்கின்றதே அது தான் ஞான பாத்திரம். கனத்த பாத்திரம் இருக்கிறதே அது பாசப் பாத்திரம். அபிநந்தா! உதிர்ந்து போக விரும்புகின்ற உரோமங்கள் உதிர்ந்து போகின்றது. உதிர விரும்பாத உரோமங்கள் நரைக்கின்றன. உதிர்ந்த முடி ஓடிப்போகின்றது. உதிராத முடி தலையிலேயே இருந்து கொண்டு கேலி பண்ணுகின்றது. விலக்க முடியாத பந்தங்களும் அப்படிப்பட்டது தான்! உன்னுடைய இருதயம் பாசத்துக்காகவே படைக்கப்பட்டது.

சித்திரவதை என்பது அதுக்கு நீ கொடுத்தே தீர வேண்டிய விலை.. போய்வா அப்படி என்று சொல்லி அபிநந்தனுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டார் போதி சத்துவர். அதனாலே நான் துறவியாகப் போகிறேன்.. ஞானியாகப் போகிறேன் என்று எல்லாம் சொல்வது சுலபம். ஆனால் அப்படி ஆகுவது கடினம். அது எல்லாம் சாதாரண விடயம் இல்லை.

மிகவும் பெரிய விடயம். மொட்டை அடித்துக் கொண்டே காவி வேஷ்டியை கட்டிவிட்டால் பந்த பாசம் தானாக போய்விடுமா? போகாது. ஆசையை விட்டுவிடுவதற்கு மனிதன் பழகவேண்டும். அதற்காகத்தான் சில புண்ணிய நதிகளிலே முழுக்கு போட்டுவிட்டு நமக்கு பிடித்தஎதையாவது விட்டுவிட்டு வரவேண்டும் என வைத்திருக்கிறார்கள்.

சில பேர் காசு பணம் கூட எல்லாம் தண்ணியிலே வீசி எறிவார்கள். நம்மை மாதிரி ஒருவர் அந்த இடத்துக்கு போனால் புண்ணிய தீர்த்தத்திலே முழுக்குப் போட்டுவிட்டு நிஜமாகவே சில ஆசைகளை எல்லாம் விட்டு விட வேண்டும் என்ற நோக்கத்திலே தான் போனார். கொஞ்சம் சில்லறைக் காசையும் கையிலே வைத்து மூடிக்கொண்டு தண்ணிக்குள்ளே போனார். மூக்கை பிடித்துக் கொண்டு நீராடினார்.

வெறும் கையோடே வெளியிலே வந்தார். கரையேறி ஈர உடையோடு வந்து கொண்டிந்தார். பக்கத்திலே இருந்த நண்பர் இப்போது எப்படி இருக்கிறது என கேட்டார். மனசு நிறைந்து இருக்கு. இனிமேல் அடிக்கடி வந்து நீராடலாம் என்று தோன்றுகிறது என்றார் இவர். ஏன் என்று கேட்டார் இவர். நான் தண்ணிக்குள் மூழ்கும் வரை எதையும் விட்டுவிட வேண்டும் என்ற ஆசையில் தான் போனேன்.

ஆனால் தண்ணிக்கு அடியில் போய் பார்த்தால் ஏற்கனவே யாரோ வீசி எறிந்த பவுன் வளையல் ஒன்று கையிலே தட்டுப்பட்டது. உடனே என் முடிவை மாற்றிக்கொண்டேன். மனைவிக்கு எஉதவும் என்று சொல்லி அதை எடுத்து மடியிலே சொருகிவிட்டு வெளியிலே வந்து விட்டேன் என்றார். இவர் மனைவி குடுத்து வச்சவங்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைய வேண்டும்

## செல்வம் எம்.பி

(வவுனியா)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களின் வாக்குகளில் தமிழ் பொது வேட்பாளாளருக்கு 50 வீத வாக்குகள் கிடைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். தமிழ்த் தரப்புக்கள் அனைத்தும் ஒற்றுமையாக இருந்தால் தான் தமிழ் மக்களின் எதிர் பார்ப்புக்களை நிறைவேற்ற முடியும் எனவும் தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் தமிழரசுக் கட்சி ஒத்துழைக்க வேண்டும் என வும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (நி-6)

# அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்துங்கள்

## சுதந்திரபுர மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கிராமத்தின் அபிவிருத்தி முன்னேற்றங்கள் தொடர்பாக பிரதேச செயலாளர் தலைமையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

கிராமத்திற்கு வருகை தந்த அதிகாரிகளிடம் ஏ-35 சாலையில் இருந்து சுதந்திரபுரம் கிராமத்திற்கு செல்லும் 08 கிலோ மீற்றர் துரங்கொண்ட கொங்கிறீட் வீதி பெருமளவில் சேதமடைந்து குன்றுங் குழியுமாக காணப்படுகின்றது.

இவ் வீதியினை தார் கொண்டு நிரந்தர வீதியாக புனரமைக்கும்படி 1.000 குடும்பங்கள் வாழும் இக் கிராமத்திற்கான பேருந்து சேவை. மருத்துவ வசதி இல்லாததன் காரணமாக நீண்ட துாரங்கள் மருத்துவமனைக்கு செல்ல வேண்டியுள்ளதால் நடமாடும் மருத்துவ சேவை மற்றும் மழை காலங்களில் வடிகால்கள் இல்லாததன் காரணமாக வீதிகளை வெள்ளம் மூடிப்பாய்வதன் காரணமாக மக்கள் போக்குவரத்து செய்வது சிரமமாக உள்ளதால் மேற்குறித்த இப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுத் தருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம அபிவிருத்திச் சங்கம் குறித்த கலந்துரையாடலின் போது வலியுறுத்தியிருந்தனர்.(நி-6-350)

# மீனவர்களை விடுவிக்கக்கோரி ராமேஸ்வர மீனவர்கள் பகிஷ்கரிப்பு

## 800 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையில் நங்கூரமிடப்பட்டு நிறுத்தம்

(மன்னார்)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேரை கைது செய்த இலங்கை அரசை கண்டித்தும். சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் நேற்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் ஈடுபட்டனர்.


நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ராமேஸ்வர 22 மீனவர்களை கைது செய்து ஊர்க்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி யாழ். சிறைச்சாலையில் சிறைப்படுத்தியுள்ளனர்.

இதனை அடுத்து நேற்று முன்தினம் ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்கத் தலைவர்கள், மீனவர்கள் மற்றும் விசைப்படகின் உரிமையாளர்கள் ராமேஸ்வரம் துறைமுகத்தில் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

அந்த கூட்டத்தில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேரை கைது செய்த இலங்கை கடற்படையை கண்டித்தும், சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட போவதாக முடிவு செய்ய நிலையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மீனவர்கள் இந்த வேலை நிறுத்தம் காரணமாக சுமார் 800 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் மீன்பிடிக்கச் செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

(நி-6-285)



தமிழீழ விடுதலை இயக்கம் எனப்படும் ரெலோ அமைப்பின் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் திருவுருவச் சிலை நேற்று முன்தினம் வவுனியா நகர மத்தியில் உள்ள மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் கட்சியின் தற்போதைய தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் குறித்த சிலை திறந்து வைக்கப்பட்டது. படம்: வசந்தரூபன்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3151

டனுசியா




துஷா




கபி




கண்ணா




பிரசாந்




சுலக்ஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 516





"நம்ப முடியாதுதான், ஆனாலும் அது உண்மை. சின்னஞ் சிறு பிராயத்திலிருந்து என்னை ஒருத்தி ஏழை என்றும், அனாதையென்றும் ஏளனம் செய்து வந்தாள். அரச குலத்துப் பிள்ளைகளுடன் விளையாடும் உரிமைக்கூடக் கிடையாது என்று சொல்லி வந்தாள். அந்த அவமதிப்பைப் பொறுக்க முடியாமல் இந்தத் தவற்றைச் செய்தேன்."

"தேவி! அப்படித் தங்களை அவமதித்த பெண் பேய் யார்?"

"தெரியவில்லையா, ஊகிக்க முடியவில்லையா?"

"இளைய பிராட்டி குந்தவை தானே? ஆமாம். அவளுக்கு ஒரு நாள் நான் புத்தி புகட்டியே தீர்வேன்.

"கடவுளே அவளுக்குத் தண்டனை அளித்துவிட்டார்! அருமைத் தம்பியும், ஆருயிர் காதலனும் ஒரே போக்கில் போய் விட்டார்கள். இப்போது அவளுடைய நிலையை நினைத்தால் எனக்கு அநுதாபமாயிருக்கிறது."

"இந்தத் தண்டனை அந்த அகம்பாவக் காரிக்குப் போதவே போதாது."

"சற்று முன் நான் தங்களை வேண்டிக்கொண்ட காரியத்துக்கு உதவி செய்தால் அவளுடைய தண்டனை பூர்த்தியாகும். சோழ சாம்ராஜ்யத்திற்குத் தனி நாயகியாக இருக்க வேண்டும் என்ற அவள் ஆசை மண்ணோடு மண்ணாகும்."

"தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். பரிசு என்ன தருவீர்கள்?"

எது கேட்டாலும் தருவேன். தமிழ்ப் பெண்குலத்தின் மரபுக்கு மாறுபடாத எதைக் கேட்டாலும் தருகிறேன்.

"ராணி மேலை நாடுகளில் ஒரு புதிய சமயம் தோன்றியிருக்கிறதாம். அரபு தேசம், பாக்தாத் தேசம், பாரஸீகம் முதலிய தேசங்களில் அது பரவியிருக்கிறதாம். அந்தச் சமயக் கோட்பாட்டின்படி கல்யாணமான தம்பதிகள் விரும்பினால் பிரிந்து விடலாம். அதற்குச் சடங்கு உண்டாம். ஸ்திரீகள் கூட வேறு கல்யாணம் செய்து கொள்ளலாமாம்."

"ஆம், நானும் அவ்வாறு கேள்விப்பட்டிருக்கிறேன்."

"நாம் அந்த நாடுகளுக்குப் போய்விடுவோம். அந்தச் சமயக் கோட்பாட்டில் சேர்ந்துவிடுவோம்."

"அப்படியெல்லாம் சில சமயம் நானும் பகற்கனவு காண்பதுண்டு. ஆனால் நடக்கக்கூடிய காரியமா?"

"தேவி! ஏன் நடக்காது? அவசியம் நடக்கும். தாங்கள் மட்டும் சம்மதித்தால் நடக்கும். தங்களுடன் கப்பல் ஏறிக் கடல் கடந்து செல்வேன்.

தூரதேசங்களில் இறங்குவேன். இந்தக் கையில் பிடித்த கத்தியின் வலிமையினால் பெரியதொரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பேன். நவரத்தின கசிதமான சிங்காதனத்தில் தங்களை ஏற்றி வைப்பேன்!

தங்களுடைய சிரஸில் பார்த்தோர் கண் கூசும்படியான மணிமகுடத்தைச் சூட்டுவேன். இதற்காகவே நான் பிறந்திருக்கிறேன் இதற்காகவே இவ்வளவு போர்க்களங்களிலும் சாகாமல் உயிரோடு இருந்து வருகிறேன்."

"ஐயா! அதோ என் கணவர் திரும்பி வந்து கொண்டிருக்கிறார். படகு கரையை நெருங்கிவிட்டது. அமைதி அடையுங்கள், மற்ற விடயங்களைப் பிறகு பேசிக் கொள்ளலாம்." பிறகு எப்போது தேவி?

(தொடரும்...)

அவளுடைய கண் விழிகள் மேல் நோக்கிச் சென்றன. ஏதோ, பழைய துயரமான ஞாபகங்களில் சிறிது நேரம் ஆழ்ந்திருந்தாள் என்று தோன்றியது.

"பாவம்! கிழவர் பேரில் பழி சொல்ல வேண்டாம். மனதார இஷ்டப்பட்டுத் தான் இவரை மணந்தேன்."

"ஏன்? எதற்காக? இவரிடம் அப்படி என்ன கண்டீர்கள்?"

"இவரிடம் ஒன்றும் காணவில்லை. அரண்மனை வாழ்வுக்கும் அதிகாரத்துக்கும் ஆசைப்பட்டு நானாகவே இவரை மணந்தேன்."

"என்னால் நம்பமுடியவில்லை!"



# சிறுவர் அரங்கம்

## சிறந்த ஆயுதம்

சக்கரவர்த்தி அக்பர் சில பிரமுகர்களுடன் நந்தவனத்தைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தார். அவருடன் பீர்பாலும் இருந்தார். நந்தவனத்தில் மலர்ந்திருந்த ரோஜாப்பூக்களைப் பார்த்துப் பரவசமான அக்பர், "ஆகா! பூமியில் ஒரு சொர்க்கம் உண்டு எனில் அது இந்த நந்தவனம்தான்!" என்றார்.

"ஆம், பிரபு! நீங்கள் கூறுவது சரி!" என்று அனைவரும் ஆமோதிக்க, பீர்பால் மட்டும் மௌனமாக இருந்தார். அதைக் கவனித்த அக்பர், "பீர்பால்! சற்று முன் நான் கூறியதில் உனக்கு உடன்பாடு இல்லையா?" என்று கேட்டார்.

"பிரபு! இந்த நந்தவனத்திற்கு அழகைத் தருவது இந்த ரோஜா மலர்கள் தான். ஆனால் அழகு எங்கே உள்ளதோ, அங்கே அபாயமும் உண்டு!" என்றார் பீர்பால்.



"ஓகோ! ரோஜாப்பூக்களில் உள்ள முட்களைக் குறிப்பிடுகிறாயா?" என்று அக்பர் கேட்டார்.

"இல்லை, பிரபு! நான் அவற்றைச் சொல்லவில்லை" என்று பீர்பால் சொல்ல,

"அப்படியானால், ரோஜாச் செடிகளின் உள்ளே மறைந்திருக்கும் பாம்புகளைக் குறிப்பிடுகிறாயா?" என்று அக்பர் கேட்டார்.

"மனிதனால்தான் பாம்புகளுக்கு அபாயம்! நம் காலடி யோசையைக் கேட்டவுடனேயே அவை பயந்து ஓடி விடுகின்றன!" என்றார் பீர்பால்.

"பின் நீ எதைத்தான் அபாயம் என்று குறிப்பிடுகிறாய்?" என்று சலிப்புடன் அக்பர் கேட்க, "பிரபு! அபாயம் என்பது அழகை மட்டுமல்ல வலிமை, செல்வம், புகழ் ஆகிய அனைத்தையும் அபாயம் சூழ்ந்து உள்ளது.

தாங்கள் பாரதத்தின் மிக வலிமை பொருந்திய, மிகப் புகழ்பெற்ற, சகல செல்வங்களையும் ஒருங்கே பெற்ற சக்கரவர்த்தி! ஆனால், மேற்கூறிய விடயங்களினால், அண்டை ராஜ்யத்து மன்னர்கள் தங்கள் மீது பொறாமை கொண்டுள்ளனர். தங்களை வீழ்த்தி வெற்றிவாகை சூட சதித்திட்டம் இட்டவாறு உள்ளனர்.

அதனால்தான், பூலோக சொர்க்கம் என்று ஒன்று இருப்பதாக நான் எண்ணவில்லை" என்றார். பீர்பாலின் சொற்கள் அக்பரை சிந்திக்கத் தூண்டின.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப்போல் பிறரையும் நேசி

— யேசு பிரான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரலோகத்தில் இருக்கும் பிதாவே கர்தினாலை மன்னித்தருள்க

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைத்தால் அது இலங்கையின் இறையாண்மைக்குப் பாரிய பிரச்சினையாக அமையும் என்பதுடன் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இலங்கை மாறிவிடும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியுள்ளார்.

ஆக, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைக்கக்கூடாதென்பது அவரின் கருத்தாக உள்ளது.

தவிர, இவ்வாறு பாலத்தை அமைப்பதன் மூலம் இலங்கையை தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக மாற்றுவதுதான் இந்தியாவின் நோக்கம் என்பது போலவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கருத்து அமைகிறது.

இலங்கையிலுள்ள கத்தோலிக்க மக்களின் மதத் தலைவராக இருக்கக்கூடிய மல்கம் ரஞ்சித் ஆண்டகை, எதற்காக இப்படியொரு கருத்தை முன்வைத்தார் என்பது தெரியவில்லை.

பொதுவில் சமயத் தலைவர்கள் ஆன்மீகப் பணியுடன் தமது கடமையை எல்லைப் படுத்துவது நல்லது.

இங்குதான் ஆன்மீகப் பணி என்பது, மக்களுக்குத் தொண்டு செய்வதையும் மனித சமூகத்தை மானிட நேயத்துடன் வாழ வழிப் படுத்துவதையும் குறிக்கும்.

சரி, மக்களின் தேவைகள் அரசியலுக்குள் இருப்பதால் அரசியல் சார்ந்த விடயங்களையும் கதைக்க வேண்டும் எனக் கருதப் படுமாயின், நல்லது கதைக்கலாம். ஆனால் அதற்குள் நீதியும் நியாயமும் நடுவுநிலையும் தெய்வீகத்தன்மையும் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து இன, மத வாத சிந்தனையுடன் கருத்துரைப்பது கடவுளுக்கு ஏற்கக் கூடியதல்ல.

ஆனால் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இனவாத சிந்தையுடன் செயற்படுகிறார் என்பது தெரிந்த விடயம்.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோது – எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அந்த மக்கள் கதறி அழுதபோது கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மௌனமாகவே இருந்தார்.

ஆம், வன்னி யுத்தத்தில் ஆயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள் கொல்லப்பட்டனர்.

ஆயினும் அவர்கள் தமிழர்கள் என்பதால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மௌனம் சாதித்தார். இது எத்துணை பாவச் செயல்.

அதேநேரம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடைபெறும்வரை மகிந்த ராஜபக்ஷக்களை கடுமையாக விசுவாசித்ததுடன் அவர்களுக்குப் பேராதரவும் வழங்கியவர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை என்பது அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படும் கொழும்புப் பேராயர் இப்போது இலங்கை – இந்தியப் பாலம் அமையப் பெற்றால், அது ஈழத் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பாக அமைந்துவிடுமோ என்று ஏங்கிப் போனதால், பாலம் அமைப்பதற்குத் தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

பரவாயில்லை. பரலோகத்தில் இருக்கும் பிதாவே! உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற உன் திருமகனின் வார்த்தையைப் பின்பற்றாத பாவத்தினின்றும் கர்தினாலை மன்னித்தருளும். இது எங்களின் மன்றாட்டமான கோரிக்கை.

# திருக்கோணேஸ்வரம் கோவில் அருகில் உள்ள பெட்டிக் கடையில் கசிப்பு விற்பனை

## ஆளுநர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் கலாநிதி ஆறு. திருமுருகன் வேண்டுகோள்

திருக்கோணேஸ்வரம் கோவில் அருகில் உத்தரவின்றி அமைக்கப்பட்ட பெட்டிக்கடையில் கசிப்பு விற்பனை. இச்சம்பவம் தொடர்பில் கிழக்கு ஆளுநர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில்,

திருக்கோணமலை திருக்கோணேஸ்வரம் அருகே பக்தர்கள் கோவில் வரும் பாதையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பெட்டிக்கடையொன்றில் கசிப்பு குடிவகை விற்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டு ஒருவரை பொலிஸார் கைது செய்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்விடயம் சைவ மக்களுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் தரும் செய்தியாகும்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடைகளை அகற்றுமாறு சைவ நிறுவனங்கள் தொடர்ந்து வேண்டுதல் விடுத்த போதும் இதுவரை எவரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

தங்களிடமும் இவ்விபயம்தொடர்பாக முறையிட்ட போதும் இதுவரை பயன்கிட்டவில்லை. புனிதமான வரலாற்றுத்தலமருகே இவ்வாறான சம்பவம் நடைபெறுவது அருவருக்கத்தக்க செயலாகும். தாங்கள் இதற்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த, உடன் பெட்டிக்கடைகளை நீக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7,10)

### மாத்தளை பிரதேசத்தில்

## ஆட்டோ - உழவு இயந்திரம் விபத்து; ஒருவர் மரணம்

மாத்தளை பிரதேசத்தில் வில்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹதுன்கமுவ -ஹெட்டிபொல வீதியில் நாமினி ஓயா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வில்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வில்கமுவையிலிருந்து ஹதுன்கமுவ நோக்கிப் பயணித்த முச்சக்ரவண்டி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் பயணித்த உழவு இயந்திரம் ஒன்றுடன் மோதி வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது முச்சக்கரவண்டி சாரதியும், உழவு இயந்திரத்தில் பயணித்த மூவரும் காயமடைந்துள்ள நிலையில் வில்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் தெவகிரிய பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். காயமடைந்த மூவரும் மேலதிக சிகிச்சைக்காக மகியங்கனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் வில்கமுவ வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வில்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,10)

### நாட்டிற்கு வருகை தரும்

## சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 9 லட்சத்து 66 ஆயிரத்து 604 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் ஜுன் மாதத்தின் இதுவரையான காலப் பகுதியில் 69 ஆயிரத்து 825 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அத்துடன் ஜனவரி மாதத்தில் 2 இலட்சத்து 8,253 சுற்றுலாப் பயணிகளும், பெப்ரவரிமாதத்தில்2 இலட்சத்து 18,350 சுற்றுலாப் பயணிகளும், மார்ச் மாதத்தில் 2 இலட்சத்து 9,181 சுற்றுலாப் பயணிகளும், ஏப்ரல் மாதத்தில் ஒரு இலட்சத்து 48,867 சுற்றுலாப் பயணிகளும், மே மாதத்தில் ஒரு இலட்சத்து 12,128 சுற்றுலாப் பயணிகளும் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குறித்த காலப்பகுதியில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யா, இந்தியா, ஜேர்மனி, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,10)

## பல்கலையை சுற்றி பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் பொலிஸ்பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பிற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகள், கல்லூரிகள், கல்வி காரியாலயங்கள், மாணவர் சமூகம் மற்றும் பௌதீக வளங்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கல்வி அமைச்சின் செயலாளரினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-7,10)

## நீரில் மூழ்கிய பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கொட்டுகொட- போலந்த பிரதேசத்தில் அத்தனகல்ல ஓயாவில் நீராடச் சென்று நீரில் மூழ்கி காணாமல் போன மாணவனின் சடலம் பொலிஸ் மற்றும் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளது.

ஜா-எல பிரதேசத்தை சேர்ந்த 15 வயது பாடசாலை மாணவர் ஒருவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கட்டான பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் இந்த மாணவன் நேற்று முன்தினம் மேலும் இரு மாணவர்களுடன் அத்தனகல்ல ஓயாவிற்கு நீராடச் சென்ற போதே நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இந்த மரணம் தொடர்பாக மற்ற இரு மாணவர்களிடம் பொலிஸார் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

(ம-7,10)

## சதுர்த்தி உத்ஸவம்


யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உத்ஸவம் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

காலை 9.30 மணிக்கு கணபதி ஹோமமும் மூர்த்தி பூஜை, வசந்த மண்டபபூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வருவார் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தெரிவித்தார்.

(ம-7,10)

(நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் – ஒரு பார்வை


## கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


01

2024 ஆம் ஆண்டில் மட்டும் 50 நாடுகளில் அதிபர் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதன்படி அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பெய்ஜிங், இந்தியா, இலங்கை, தாய்வான், பாகிஸ்தான், இந்தோனேசியா, மெக்சிகோ, தென்னாபிரிக்கா உள்ளிட்ட முக்கிய நாடுகளில் அதிபர் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற உள்ளன.

இவ் ஆண்டின் முதல் தேர்தலாக வங்கதேசத்தில் தேசிய பாராளுமன்றத் தேர்தல் ஜனவரி 7ஆம் திகதி நடைபெற்றது. முடிவுகளின்படி, அப்போதைய ஆளும் அரசியல் கட்சியான அவாமி லீக் (AL), நாட்டின் பாராளுமன்றத் தொகுதிகளில் சுமார் 75% ஐக் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றுள்ளது.

இது அவாமிலீக் கட்சியின் தலைவி ஷேக் ஹசீனா வங்காளதேசத்தின் நீண்ட காலம் பிரதமராக பதவி வகித்தவர். ஐந்து முறை வெற்றி பெற்றுள்ளார், அவற்றில் நான்கு தொடர்ச்சியான வெற்றிகள் மற்றும் உலகின் மிக நீண்ட காலம் ஒரு நாட்டின் பெண் தலைவராக இருக்கின்றார்.

ஒரு நிலையில், 1975 மற்றும் 1991 இற்கு இடையில் இராணுவ ஆட்சி உட்பட பஞ்சம், பேரழிவு சுற்றுச்சூழல் பேரழிவுகள் மற்றும் வன்முறை இராணுவச் சதிகளை அனுபவித்த ஒரு இனப் படுகொலைப் போரில் பிறந்த ஒரு முன்னாள் பிரிட்டிஷ் காலனியான இந் நாடு, 1990களில் ஜனநாயகம் மீளப் பெற்றதிலிருந்து தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல்களை நடத்துவது குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று தசாப்தங்களில், குறிப்பாக அவாமி லீக் நிர்வாகத்தின் கீழ், பரந்த சமூக மற்றும் பொருளாதார நலத்திட்டங்கள் மூலம் மில்லியன் கணக்கான மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க வழிசமைத்துள்ளது. UN இன் பல ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை (Millennium Development Goals -MDGs) பூர்த்தி செய்துள்ளது. தற்போதைய நிலையான வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals-SDGs) அடைவதற்கான பாதையில் உள்ளது.

இந் நாடு பாலின சமத்துவத்தில், குறிப்பாக குழந்தை மற்றும் தாய் இறப்பு, கல்வி மற்றும் அரசியல் ஆகிய பகுதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளது, மேலும் உலகின் மிகப்பெரிய ஜவுளி உற்பத்தி மற்றும் மையங்களின் ஒன்றாக விளங்குகிறது. குறிப்பாக ஆடைத் தொழிலில்.


சுருக்கமாகச் சொன்னால், குறுகிய காலத்திற்குள், உலகமயமாக்கல் மற்றும் தாராளவாதத்தின் வெற்றிக் கதையாக வங்காளதேசம் மாறிவிட்டது.

மேலும், 1991 முதல், இராணுவ சதிப்புரட்சிகளால் குறிப்பிடத்தக்க இடையூறுகள் மற்றும் ஒரு தற்காலிக அரசாங்கத்தின் ஆட்சியின் குறிப்பிடத்தக்க இடையூறுகளைத் தவிர, வங்காளதேசம் பெண்கள், அரச தலைவர்களால் மட்டுமே ஆளப்படுகிறது. இது உலகில் வேறு எந்த நாட்டினாலும் செய்ய முடியாத சாதனையாகும்.


பங்களாதேஷ் அரசியலில் இரண்டு வலிமையான பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஷேக் ஹசீனா மற்றும் கலிதா ஷியா ஆகியோராவர். கலீதா ஷியா பங்களாதேஷின் பிரதமராக 1991 முதல் 1996 வரையும், 2001 முதல் 2006 வரையும் இருந்தார். இவர் பங்களாதேஷின் முதல் பெண் பிரதமர் ஆவார்.

ஷேக் ஹசீனா பங்களாதேஷின் நிறுவனரும் முதல் ஜனாதிபதியுமான ஷேக் முஜிபுர் ரஹ்மானின் ஐந்து பிள்ளைகளில் மூத்தவர் ஆவார். இவர் 2009 ஆம் ஆண்டு முதல் இன்று வரை வங்காளதேசத்தின் பிரதமராக இருந்து வருகிறார். இதற்கு முதல் 1996 முதல் 2001 வரையான காலப் பகுதியிலும் அந் நாட்டின் பிரதமராக இருந்தார். மேலும் இவர் வங்காளதேசத்தின் இரண்டாவது பெண் பிரதமர் ஆவார். இவர் 1981 இலிருந்து வங்காளதேசத்தின் முக்கிய அரசியல் கட்சியான அவாமி லீக்கின் தலைவராக இருந்து வருகிறார்.

கலிதா ஷியா எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசிய கட்சியின் தலைவராக இருந்தார். பெப்ரவரி 8. 2018 அன்று, ஊழல் குற்றச்சாட்டில் கலிதா ஷியாவுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அத் தண்டனை 10 ஆண்டு களாக நீடிக்கப்பட்டது. தற்போது உடல் நலம் குன்றிய நிலையில் கலிதா ஷியா வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.



ஷேக் ஹசீனா



கலிதா ஷியா

கலிதா ஷியாவிற்குப் பின் கட்சித் தலைவராக பதவியேற்ற அவரின் மகன் தாரிக் ரெஹ்மான் கிரிமினல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டார். இதனால் இவர் தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்.

வங்காளதேசத்தில் உள்ளவர்களும், அவாமி லீக் மற்றும் ஷேக்ஹசீனாவை ஆதரிக்கும் புலம்பெயர்ந்தவர்களும், 2024 தேர்தல்களின் வெற்றி, தற்போதைய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதாரம், கல்வி, பெண்கள் அதிகாரமளித்தல் மற்றும் பொது சுகாதாரம் உட்பட பல கொள்கைகளின் தொடர்ச்சியை ஏற்படுத்தும் என கருதுகின்றனர்.

இஸ்லாமிய குழுக்களின் வன்முறை அச்சுறுத்தலுக்கு எதிரான அவாமி லீக் இன் நடவடிக்கைகள் தேசிய மற்றும் சர்வதேச வட்டாரங்களில் ஆதரவைப் பெற்றுள்ளன. அண்டை நாடுகள் மற்றும் பிராந்திய சக்திகள், குறிப்பாக இந்தியா மற்றும் சீனாவின் இத் தேர்தல் முடிவில் ஆர்வமாக இருந்தனர்.

தெற்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் பிராந்திய அரசியலில் ஒரு முக்கிய பங்காளியாக அவாமி லீக் தலைமையிலான அரசாங்கம் இருப்பதோடு அதன் சமநிலைச் செயலில் பின்பற்றி வரும் பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் பிற ஏற்பாடுகள் மற்றும் பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியை இந்த வெற்றி சமிக்ஞை செய்கிறது.

உக்ரைன் படையெடுப்பின் தற்போதைய சிக்கலான புவிசார் அரசியலுக்குள் கூட, ஹசீனாவின் கீழ் உள்ள அவாமி லீக் அரசாங்கம் ரஷ்யாவுடனான உறவைத் திறம்பட வழிநடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய அமெரிக்க இந்தோ-பசிபிக் மூலோபாயம், அவாமி லீக் அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியில் இருப்பதன் மூலம் பயனடையும். 2024 தேர்தல் முடிவுகள், சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் ஐ.நா அமைதி காத்தல் ஆகியவற்றில் அதன் பல முயற்சிகள் மூலம் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பில் ஒரு பங்காளியாக பங்களாதேஷின் வளர்ந்து வரும் பாத்திரத்தில் ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வங்காளதேசத்தின் 1972 தேர்தலில் பெண்களுக்கு 15 இடங்கள் ஒதுக்கப்பட்டபோது பாராளுமன்றத்தில் பெண்களுக்கான ஒதுக்கீடு முறை முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் விரிவாக்கத்திற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 1997 இல், அவாமிலீக் அரசாங்கத்தின் கீழ், 15 ஆவது அரசியல் திருத்தம் ஒதுக்கீட்டை விரிவுபடுத்தியதோடு, பெண்களுக்கான மொத்த இட ஒதுக்கீடு இடங்களின் எண்ணிக்கையை 50 ஆகக் கொண்டு வந்தது.

300 தேர்தல் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஒதுக்கீடுகளுக்குள் வரமாட்டார்கள். இந்த ஒதுக்கீடுகளை நிரப்புவதற்கு வெவ்வேறு வழிகள் உள்ளன. ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆரம்ப நாட்களில், இந்தப் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருக்கப் போகிறார்கள், இந்த ஆசனங்களைப் பெறுவதற்கு அரசியல் தொடர்புகள் எந்த அளவுக்குப் பங்களிக்கின்றன, பங்களாதேஷ் அரசியலுக்கு அவர்கள் எந்த அளவுக்குப் பங்களிப்பார்கள் என்று பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

ஆனால் இன்று, அந்தக் கேள்விகள் சர்ச்சைக்கு உட்பட்டவையாக இல்லை. சமூகம் மற்றும் தேசிய அளவில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பின் தாக்கம் குறித்த ஆராய்ச்சிக்கான அடிப்படைகளை இவ் ஒதுக்கீடு உருவாக்குகின்றன. உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) 2023 பாலின இடைவெளி அறிக்கையின்படி, அரசியல் அதிகாரமளித்தல் துணைக் குறியீட்டில், 155 நாடுகளில் பங்களாதேஷ் உலகளவில் ஏழாவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந் நாடு 55.2% பாலின சமத்துவத்தை அடைந்துள்ளது மற்றும் தெற்காசியாவில் உள்ள மற்ற அனைத்து நாடுகளையும் விட குறிப்பாக அரசியல் சமத்துவத்தில் சிறப்பாக உள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள் ஃபத்வா (முஸ்லீம் சட்டம்), வர தட்சணை, குழந்தைத் திருமணம், குடும்ப வன்முறை, போதைப்பொருள் மற்றும் பலதார மணம் உள்ளிட்ட சமூக முறைகேடுகளுக்கு எதிரான போராட்டத்தில் பங்களித்துள்ளனர் என்பதை தற்போதுள்ள ஆராய்ச்சி காட்டுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.இளைஞன்...

ராட்சி கிழக்கு மாமுனை பகுதியைச் சேர்ந்த டிசாந்தன் பெர்னாண்டோ என்கின்ற 26 வயதுடைய கடற்றொழிலாளரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியிலிருந்து புத்தளம் கற்பிட்டி பகுதிக்கு கடற்றொழிலுக்காக சென்றிருந்த குறித்த கடற்றொழிலாளர் நேற்றுமுன்தினம் காலை வரை கரை திரும்பாத நிலையில் கடற்றொழிலாளர்களால் தேடுதல் பணி நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, கற்பிட்டி பகுதியில் அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## மன்னாரில்...

தும் வவுனியா பகுதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் முருங்கனுக்கும் கற்கிடந்தகுளம் கிராமத்திற்கும் இடையில் உள்ள ரயில்வே கடவைப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

இறந்தவரின் உடல் முருங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணையை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (ம-7,10,285)

## விவசாயி...

வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க 55,000 மெட்ரிக் தொன் உரம் இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

உர விநியோகம் போன்ற நடவடிக்கைகளுக்காக சுமார் ஒன்றரை பில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளதாகவும் அத்தொகையை அரசாங்கம் ஏற்க நடவடிக்கை எடுக்குமெனவும் விவசாய அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7,10)

## வெதுப்பகம்...

பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவினரால் தொடர்ச்சியாக உணவு கையாளும் நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, சுகாதார சீர்கேடான உணவு கையாளும் நிலையங்களிற்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கடந்த 12.06.2024 ஆம் திகதி நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி, மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் குழாமினால் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட 09 வெதுப்பகங்கள் இரவு திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தன. இதன்போது கொக்குவில் பகுதியில் சுகாதார சீர்கேடாக இயங்கிய 02 வெதுப்பகங்கள் இனங்காணப்பட்டன.

இரண்டு வெதுப்பகங்களிற்கும் எதிராக கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் நேற்று யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளினை விசாரித்த நீதவான் ஆனந்தராஜா ஒரு வெதுப்பகத்தினை சீல் வைத்து மூடுமாறும் மற்றைய வெதுப்பகத்தினை திருத்த வேலைகளை உடன் மேற்கொள்ளுமாறும் பணித்து வழக்குகளினை எதிர்வரும் 03.07.2024 ற்கு ஒத்திவைத்தார்.

அத்துடன் உரிமையாளர்களை தலா ஒரு இலட்சம் ஆட்பிணையிலும் விடுவித்தார். இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் வெதுப்பகம் சீல் வைத்து மூடப்பட்டது. (ம-7,10,33)

## வவு.களஞ்சிய...

யில் அமைந்துள்ள அலுமினியம் மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலை மற்றும் வீட்டு தளபாடங்களின் களஞ்சிய சாலை என்பவற்றை உள்ளடக்கிய தொழிற்சாலையிலேயே இவ்வாறு தீ விபத்து நேற்று ஏற்பட்டுள்ளது.

தொழிற்சாலையில் பணி புரிந்த இருவர் சாப்பாட்டுக்காக வெளியில் சென்ற நிலையில் இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்தையடுத்து வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அப்பகுதி மக்களுடன் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நீர்த்தாரை வீசி நடவடிக்கை எடுத்திருந்தனர்.

எனினும் தீ விபத்தில் தொழிற்சாலை முழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளதுடன், பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் தீயில் நாசமாகியுள்ளது.

இந்நிலையில் தீ விபத்துக்கான காரணங்கள் குறித்து ஈச்சங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,250)

## ஓமந்தையில்...

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனம் நிறுத்தாது சென்றமையால் துப்பாக்கிச் சூடு நடத்தி பல இலட்சம் பெறுமதியான மரங்களை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜயசேகரவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், உடனடியாக செயற்பட்ட பொலிஸார் ஓமந்தை, பாலமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விசேட கண்காணிப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, மரங்களை ஏற்றி வந்த பிக்கப் ரக வாகனம் பொலிஸாரை மோதித் தள்ளும் வகையில் செயற்பட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த வாகனத்தை நோக்கி 5 முறை துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது வாகனத்தை கைவிட்டு மரங்களை கடத்திச் சென்றவர்கள் தப்பி ஓடியுள்ளனர். குறித்த வாகனத்தை கைப்பற்றிய பொலிஸார் அதில் இருந்து சுமார் 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரங்களை மீட்டுள்ளனர். (ம-7,10,250)

## கல்...

நுழைவாயிலையும் பூட்டிய நிலையில் அதிகாரிகளை உள்நுழைய விடாமல் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெறும் நிர்வாக அடக்குமுறைகளை கண்டித்தும் அதற்கான உரிய தீர்வு கோரியும் தொடர்ச்சியாக 92 நாட்களாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக மட்டக்களப்பு - கல்முனை வீதி தடைப்பட்டுள்ளதால் வாகனங்களை மாற்று வீதிகளில் அனுப்புவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

மாவட்ட அரசாங்க அதிபர் பொலிஸாரின் மத்தியஸ்தத்துடன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கேட்டுக் கொண்டதற்கிணங்க சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எட்டுப் பேர் மாவட்ட செயலகத்துக்கு பேச்சுவார்த்தைக்கு சென்றுள்ளனர்.

அதுவரை வீதி மறியல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் வழமை போன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக சுழற்சிமுறை போராட்டம் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.06.24
சீட்டிழுப்பு இலக்கம் 5514
M 0 9 1 9 1 9
அத சம்பத
M 1 9 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 0089

தன நிதானய
திகதி 2024.06.24
சீட்டிழுப்பு இலக்கம் 1544
T 25 57 59 74 T
51798

மெகா பவர்
திகதி 24/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1862
R 24 43 44 51 76
76054

லக்கி 7 VIP
திகதி 2024.06.24
சீட்டிழுப்பு இலக்கம் 0340
H 2 0 0 1 4 5 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3756
சீட்டிழுப்பு திகதி 24.06.2024
Y 19 27 42 63
Y 51191

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.24
சீட்டிழுப்பு இலக்கம் 0823
தனுசு 04 26 27 53 தனுசு
74126 19

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.06.2024 வெற்றி வாரம் 222 வர்ணம் ஊதா
ஆங்கில எழுத்து A
0 2 6 3 7 2
33078
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,279,892.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2488 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 24.06.2024 தினம் திங்கள்
09 27 66 76 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,089,440.00

சனிதா
திகதி 2024.06.24 வெற்றி வாரம் 4649
04 15 18 36 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,630,323.60
22875

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4200 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.24 தினம் திங்கட்கிழமை
20 38 47 48 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,052,860.40
956668

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 17 40 43 52 70
1664 பச்சை 24.06.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 529,391,329.80

ஜயோதா Jayoda
திகதி 2024.06.24 வெற்றி வாரம் 2036 வர்ணம் செம்மஞ்சள்
01 35 36 41 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 24,030,009.20

அட கோட்டிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2314
சீட்டிழுப்பு திகதி : 2024.06.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.122,557,388.80
25 29 33 64 H
718164


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1334)

076 825 7716 (ஆகாஸ்)

**மணப்பெண் தேவை**

- சுண்டிக்குழி, இந்து, கௌரவகுலம், 1987, திருவோணம், BA(Hons), CIMA, Divorce, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர், இந்து, கௌரவகுலம், 1986, மகம், BSc, MBA, Phd, Divorce, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வடமராட்சி, இந்து, கௌரவகுலம், 1985, கார்த்திகை, BSc, MSc, Divorce, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர், இந்து, கௌரவகுலம், 1990, ஆயிலியம், ACCA, Doing Business, Divorce, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மயிலிட்டி - கொக்குவில், இந்து, கௌரவகுலம், 1985, ரோகிணி, Business, Divorce, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புலோலி, இந்து, கௌரவகும், 1982, சுவாதி, BSc Engineering, Divorce, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- Jaffna, இந்து, கௌரவகுலம், 1982, அத்தம், Masters in Electrical Engineering, Divorce, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மீசாலை, இந்து, கௌரவகுலம், 1988, சதயம், BSc Engineer, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம், 1984, சுவாதி, BSc, Business Management, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(112)

www.thaalee.com | 077 539 3728 | 077 803 8193

# வவுனியா தேக்கவத்தையில் இளைஞர் குழு அட்டகாசம்

## இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் இளைஞர் குழு ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் குழாய்க் கிணறு அடிக்கும் தொழில் செய்து வருகின்றார்.

குறித்த இளைஞர் வவுனியா நகரில் இருந்து வீடு சென்ற போது அவரை வழிமறித்த குழு ஒன்று அவர் மீது போத்தல்கள் மற்றும் தடிகளால் தாக்குதல் நடத்தியுள்ளது.

அத்துடன் குறித்த இளைஞனின் வீட்டிற்குள் நுழைந்து இளைஞனின் தந்தை மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது.

காயமடைந்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(ம-7,10,250)

நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு

# போதைப்பொருட்களுடன் 682 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது போதைப்பொருட்களுடன் 10 பெண்களும் 672 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 18 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 8 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோயின், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(ம-7,10)

**வங்கி மீதி வசதி (Show money)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (0111)

074 17 37 684

**Show Money**

**1%**

லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான
வங்கி இருப்பு/ விசா சேவை (1263)

T.P : 075 033 6759

**உடன் தேவை**

ஆயிரம் கதியால்கள் தேவை.

தொடர்புகளுக்கு : (1336)

077 178 3316

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 10 • 01 • 1946 | மறைவு 26 • 05 • 2024

கடந்த 26.05.2024 அன்று சிவபதம் அடைந்த சற்குணநாதன் அவர்களின் அன்பு மனைவியும் மோகனதாசன் அவர்களின் அன்புத் தாயாருமாகிய

அமரர்

## திருமதி சற்குணநாதன் இராஜேஸ்வரி

(மண்டைதீவு)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 25.06.2024 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

(C-0672)

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0671)

**வேலையாட்கள் தேவை**

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்கீடு அனுபவமுள்ள கணக்கீட்டாளர் மற்றும் website design அனுபவமுள்ள (ஆண், பெண்) இருபாலாரும் விரும்பத்தக்கது. (வயது எல்லை இல்லை) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 839 3974
077 606 1333
(1328)

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0671)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

**அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்**
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0671)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1333)

**Golden Real Estate (pvt) Ltd**
077 029 4164,
077 329 4130, 077 294 1521

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org